449

"VAKIL"—TAMIL LAW...

"வக்கீல்"

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
NOV 1949
MADRAS

449
4-4

இந்த இதழில்

சர்க்கரை ஆலை
மருந்து - வியாபார, விலை
கட்டுப்பாடு சட்டம்

விவசாயிகள்
கடன் நிவாரண சட்டம்

பத்திரங்கள் - அடமானம்

கேள்வியும்-பதிலும்

ஜாகை - வாடகை
கட்டுப்பாடு சட்டம்

பருத்தி கட்டுப்பாடு உத்திரவு

இதர
கண்ட்ரோல் உத்திரவுகள்

சர்க்கார் அறிக்கைகள்

விபரங்கள்
உள்ளே பார்க்கவும்

பொது மக்களுக்குத் தேவையான
புதிய சட்டங்களையும் கண்ட்ரோல் முதலிய
விதிகளையும் உடனுக்குடன்
விமர்சனங்களுடன்
விளக்கும்

தமிழ் மாதப் பத்திரிகை

நவம்பர் 1949

1—8

தபால் பெட்டி நெ. 26. கும்பகோணம்.

தனிப்பிரதி அணா 4
வருட சந்தா ரூ 3

உயர்ந்த ரக உற்பத்திகளுக்கு உகந்த இடம்

வந்து பாருங்கள்

★

ஸ்டார் ஆப் இந்தியா
பென்சில்களுக்கு
★
மெட்ராஸ்
பென்சில் பாக்டரி

ஸ்டேஷனரி
சாமான்களுக்கு
★
வி. பெருமாள் செட்டி
அண்டு சன்ஸ்

★

சிறந்த லித்தோ
அச்சு வேலைகளுக்கு
★
ஹேரா & கோ

5, ஸ்டிரிங்கர்தெரு, :: மதராஸ் -1.

NOV 1949
MADRAS

"வக்கீல்"

பொதுமக்களுக்கான உயர்தர
மாத சட்ட வெளியீடு.

ஆசிரியர் கமிட்டி

ஸ்ரீ T. சம்பத், B. A., B. L.,
,, G. நாகராஜபத்தர், B. A., B. L.,
,, V. தியாகராஜன், B. A., B. L.,
,, A. பார்த்தசாரதி நாயுடு, B. A., B. L.,
,, S. சாம்பசிவய்யர், B. A., B. L.,
,, T. S. வெங்கடருமன், B. A., B. L.,
,, R. கோபாலசாமி, B. A., B. L.
,, R. கிருஷ்ணமூர்த்தி, B. A., B. L.,
,, V. S. விஜயராகவாச்சாரி, B. A., B. L.

"வக்கீல்"

(சந்தா விபரம்)

வருட சந்தா	... ... ரூ.	3—0—0
தனிப் பிரதி (வெளிவரும் மாதத்தில்)	...	0—4—0
முந்திய மாதப் பிரதி	...	0—6—0
வெளிநாடு வருட சந்தா	...	6—0—0

"வக்கீல்" காரியாலயம்
தபால்பெட்டி நெ. 26 :: கும்பகோணம்

"வக்கீல்"

பொது மக்களுக்கான சட்ட
விஷயங்களை விளக்கும் மாதப் பத்திரிகை

மலர் 1 நவம்பர் '49 இதழ் 8

பொருள் அடக்கம்

குறிப்புகள்	3
சர்க்கரை ஆலைக்கட்டுபாடு சட்டம்	5
மருந்துகள் விலை, விற்பனை கட்டுப்பாடு அவசரச் சட்டம்	6
விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம்	8
கேள்வியும்-பதிலும்	13
பத்திரங்கள்-ஸ்டாம்பு, ரிஜிஸ்டர் கட்டணம் உள்பட-அடமானம்	17
ஜாகை-வாடகை கட்டுப்பாடுச் சட்டம்	20
கண்ட்ரோல்-லைசென்ஸ்-ரேஷன் விலை நிர்ணயம்-இதர சர்க்கார் அறிக்கைகள்	23

சந்தாதாரர்கள் கவனிக்கவும்

1. வருட சந்தாதாரர்களாகச் சேருபவர்களுக்கு சந்தா அனுப்பும் மாதத்திலிருந்து 12 இதழ்கள் அனுப்பப்படும். முந்திய மாத இதழ்கள் தேவையானல் பிரதி 1-க்கு அணு 6 வீதம் சேர்த்து அனுப்ப வேண்டும். கைவசம் இருக்கும் முந்திய மாதப் பிரதிகளை மட்டில்தான் அனுப்பக்கூடும். "வக்கீல்" பத்திரிகை 1949 ஹு ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்டது.

2. ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

3. சந்தாதாரர்களாகச் சேர விரும்பும் நேயர்கள் தங்கள் விலாசத்தை கொட்டை எழுத்தில் தனித்தனி எழுத்தாக எழுதும்படி கேட்டுக்கொள்ளப் படுகிறுர்கள்.

4. "வக்கீல்" பத்திரிகை சாதாரணமாய் ஒவ்வொரு இங்கிலீஷ் மாதமும் முதல் தேதியிலேயே பிரசுரம் செய்யப்படும். பிரதிகள் வரவில்லை என்று தெரிவிக்கும் வருட சந்தாதாரர்கள் ஒவ்வொரு மாதமும் 15-ம் தேதிக்குள் எழுதும்படிக்கும் அவர்கள் சந்தா நெம்பரைத் தெரிவிக்கும்படிக்கும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சவுத் இந்தியன்
சோப் ஓர்க்ஸ்
P. B. No. 38
தஞ்சாவூர்

தயாரிப்புகள் :—

அப்ஜா—ஆனந்தா—கதம்பா
ரஞ்சிதா—நீரடிமுத்து

நறுமணங்கமழும் ஸ்நான சோப்புகள்
யாவராலும் போற்றப்படுபவை.
மொத்த வியாபாரிகள் மட்டுமே
தேவைக்கு எழுதவும்.

கலியாண காலத்திற்கேற்ற
பட்டுச் சேலைகள்

துண்டுப் பாவாடைகள், ரவிக்கைத் துண்டுகள், உங்களுக்குப் பிடித்த பல தினுசுகளிலும், கலர்களிலும் ஸ்டாக் செய்துள்ளோம்.

ருக்மணி ஸில்க் எம்போரியம்
பெரிய தெரு, :: கும்பகோணம்.

பெட்ரும்லேட்டுத் திரி, பட்டுக் கயிறு,
பின்னல்கயிறு, தாலிக்கயிறு, இடுப்புக்கயிறு
முதலியவைகளுக்கு எழுதவும்.
சாம்பிள் இனம்.

ஸ்ரீ ஜானகி & Co.,
39/A பால்மால் குறுக்குத்தெரு, மதுரை.

உயர்தர பட்டு & ஜரிகை ஆடை உற்பத்தியாளர்
· பாலகிருஷ்ணையர் ·
மஹாராஷ்டிர பெரிய தெரு, கும்பகோணம்
ALB

கும்பகோணம்
ஸ்ரீ சக்கரபாணி சுவாமி
தெற்கு வீதியிலுள்ள
கணபதி விலாஸ்
காபி ஹோட்டலில்
(போர்டிங் & லாட்ஜிங்)
ருசிகரமான சாப்பாடும் சிற்றுண்டியும்
கிடைக்கும். Prop: G. கணேசன்

18769

தென் இந்திய ரெயில்வே
டெலிவரி & புக்கிங் ஸர்வீஸ்

உங்களுக்கு ரயிலில் வரும் சாமான்களை உங்களிடத்தில் பொறுப்புடன் சேர்க்கவும், உங்கள் சாமான்களை புக்கிங் செய்து ரசீதை உங்களிடம் கொண்டு சேர்க்கவும் அடியிற்கண்ட இடத்தில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

D. SRINIVASAN,
Street Delivery Contractor,
7, Pillaiar Koil Street, KUMBAKONAM.

மதுரை ஜில்லாவிற்கு
''வக்கீல்'' பத்திரிகை ஏஜண்ட்
திரு. T. R. நாகப்ப நாடார் & சன்
ஸ்ரீ வித்யா பேப்பர் மஹால்,
2/289, ராஜாஜி தெரு,
திருமங்கலம் – மதுரை.

OFFICE OF THE REGISTRAR OF ...
... NOV 1949
MADRAS

வக்கீல்

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

மலர் 1 நவம்பர் 1949 இதழ் 8

குறிப்புகள்

இந்தியக் குடி அரசு: இன்னும் இரண்டு மாதங்களில் அதாவது 26—1—1950-ல் நமது நாடு குடி அரசாக மாறும். அரசியல் நிர்ணய சபையால் நிரூபிக்கப்பட்ட அரசியல் சட்டம் அன்று முதல் அமுலுக்கு வரும். சென்ற இரண்டு வருஷங்களாக நாம் சுய ஆட்சிதான் நடத்திவருகிறோம்; ஆனால், குடி அரசாக அல்ல. ஆங்கிலேயரால் ஏற்படுத்தப்பட்ட சாதனங்களைக் கொண்டே அரசாங்கம் நடந்துவருகின்றது. இது இனி மாறும்.

எந்த நாட்டின் சரித்திரத்திலும் யுத்தம், கலகம், குழப்பம், பலாத்காரம் இவை இல்லாமல் குடிகளிடம் அரசாங்கம் மாறியது கிடையாது. ஒன்றரை நூற்றாண்டுக்கு முன் பிரஞ்சு மக்கள் தங்கள் நாட்டைக் குடியரசாக்கினர்; ஆனால், ஒரு பெரிய இரத்தக்கடலைத் தாண்டிய பிறகே அது சாத்தியமாயிற்று. அதைப் போலவே முப்பது வருடங்களுக்கு முன் ருஷ்யாவில் ஏற்பட்ட குடி ஆட்சியும் மிகப் பயங்கரமானதொரு புரட்சியைக் கொண்டே சாதிக்க முடிந்தது. நமது நாட்டில் ஏற்படும் குடி அரசும் எவ்விதத்திலும் மற்றச் சுதந்திர நாடுகளில் ஏற்பட்ட குடியரசுகளை விடக் குறைவான இலட்சியங்களைக் கொண்டதன்று. ஆனால், சாத்வீகத்தால் அமைதியாக அமைக்கப்பெற்றுள்ளது. இனி சுதந்தரத்தைக் காப்பாற்றும் கடமை நம்முடையது. அது எப்படி முடியுமென்று பார்ப்போம். முதலாவதாக, அந்நிய நாட்டினர் நமது சுதந்திரத்தைப் பிடுங்காமல் பாதுகாக்க நமக்கு ஒரு மாபெரும் சேனை வேண்டும்; ஆகாய விமானங்களும், கப்பற் படையும் வேண்டும். நவீன யுத்த சாதனங்கள் கட்டாயமாக வேண்டும். இவைகளைக் கையாள வீரர்கள் வேண்டும். இரண்டாவதாக, நமது சுதந்திரம் எல்லாக் குடிகளிடையேயும் “பங்கிடு” செய்யப்பட வேண்டும். யாவருக்கும் சம உரிமையும், சம சந்தர்ப்பங்களும், சம அவகாசமும் அளிக்கப்பட வேண்டும். சுதந்தரத்தின் விளைவை ஒரு சிலர்மட்டில் அனுபவித்துக்கொண்டு மற்றவர்கள் அதற்கு உதவி செய்துகொண்டிருக்கும்படி விடக் கூடாது. அன்னியர்களிடமிருந்து நம் சுதந்திரத்தைக் காப்பாற்ற எப்படி ஒரு மாபெரும் சேனை அவசியமோ அதுபோல் பொது மக்கள் யாவரும் அச்சுதந்திரத்தை அனுபவிக்க ஏற்றவாறு சட்டதிட்டங்கள் அவசியமானவையே. சுதந்திர நாட்டிற்கேற்றவாறு நமது சட்டங்கள் இயற்றப்பட வேண்டும். இயற்றப்பட்ட சட்டங்களைப் பொதுமக்கள் நன்கு தெரிந்து கொண்டு அவரவருக்குள்ள கடமைகளைச் செய்து, உரிமைகளை அடைய வேண்டும்.

சுதந்திரத்தின் மகிமையை உணர்ந்தீர்களா : சுதந்திரம் என்ற வார்த்தைக்கே என்ன சக்தி இருக்கின்றது பாருங்கள்! நமது பிரதம மந்திரி நேருஜியின் அமெரிக்க விஜயமே இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். ஐந்து வருடங்களுக்கு முன் நமது நேருஜியோ அல்லது அக்காலத்தில் யாவரினும் பெரிய பதவி பெற்ற ஒரு இந்தியரோ அமெரிக்கா சென்றிருந்தால் ஒரு நல்ல ஹோட்டலில் இடங்கிடைப்பதே சந்தேகம். ஆனால் சுதந்திர இந்தியாவின் முடி சூடா மன்னரை வரவேற்க அமெரிக்க ஜனாதிபதி தம் சொந்த ஆகாய விமானத்தைப்பாதி வழியிலேயே எதிர்கொண்டழைக்க அனுப்பினார்; அவரே ஆகாய விமானத்திலிருந்து இறங்கும் நேருஜியை நேரில் சென்று வரவேற்றார். நமது தேசிய கீதத்தை அமெரிக்க ராணுவத்தினர் பாண்டில் வாசித்தனர். ஆஹா! இவைகளைப்படிக்கும்போது உங்களுக்கே இவ்வித மரியாதை நடந்ததாக உணர்கின்றீர்களா? அது தான் சுதந்திர நாட்டில் நீங்கள் வசிப்பதை ஞாபகப்படுத்தும் முதல் உணர்ச்சி!

ஆந்திரர்களுக்கு ஜே! வரும் ஜனவரி மாதத்தில் இந்தியக் குடியரசுப் பிரகடனம் செய்யப்படும். அதற்குள்ளேயே இன்னும் சில தினங்களில் ஆந்திரர்கள் தனி மாகாணத்தை அடைந்து விடுவார்கள் போல் தோன்றுகிறது. அவர்கள் புத்திசாலிகள். காலத்தை வீணாக்கவில்லை. புதுக் குடியரசு அமைப்பு அமுலுக்கு வந்து விட்டால் அதில் உள்ள ஷரத்துக்களின்படி ஒரு புது மாகாணம் ஏற்படுத்துவது கொஞ்சம் சிரமம். விசேஷ கால தாமதமுமாகும். ஆனால் அரசியல் திட்டம் முடிவாக நிறைவேற்றப்படுவதற்குள் ஆந்திர மாகாணத்தையும் ஒரு தனி மாகாணமாகச் செய்வது எளிது. இதை அறிந்த ஆந்திரர் சரியான காலம் வரும் வரை சும்மா இருப்பதை விட சென்னை நகரைப் பயமுறுத்திக் கேட்டுக் கொண்டிருப்போம் என்று ஆலோசித்தனர். தமிழ் நாட்டினர் பிடிவாதமாக இருந்தனர். பிறகு சென்னை நகரில் ஒரு பாதியாவது வேண்டுமென்று கேட்டனர். அதற்கும் நம் நாட்டினர் மசியவில்லை. இப்பொழுது ‘கொஞ்ச காலம் எங்கள் தலை நகரை உங்கள் சென்னையில் வைத்துக் கொள்கிறோம்’ என்று படிப்படியாக உரிய காலத்திற்குள் இறங்கி வருவது, கோர்ட்டில் நடக்கும் வழக்குகளில் உபய வாதிகளும் ஒத்துப் போவது பற்றிப் பேசுவதை ஞாபகமூட்டுகின்றது. ஆனால் ஆந்திரர்கள் தங்கள் மாகாணத்தைப் பெற்ற கையோடு தங்கள் தலை நகரைத் தற்காலிகமாகவாவது வேறு இடத்தில் ஏற்படுத்திக் கொள்வது தான் உசிதம். ஏனென்றால் ஜாகை வாடகைக் கட்டுப்பாடு சட்டத்தில் ஒரு வீட்டில் குடியிருப்பவருக்குள்ள பாத்தியம் கூட எங்கள் ஆந்திர அரசாங்கத்திற்கு கிடையாதா என்று சொன்னால் நாம் என்ன செய்வோம்? எப்படி இருந்தாலும் ஆந்திர சர்க்காரை, சென்னையிலிருந்து ஏற்றிச் செல்லும் ரயில் பெஜவாடா ஜங்கிஷன் சென்றதும் தமிழ் நாட்டின் தலை நகர் எங்கே இருப்பது நமக்கு நலம் என்று ஆராய்வோம்.

புதிய சட்டங்கள்

சர்க்கரை ஆலைக் கட்டுப்பாடு சட்டம்

(சென்னை 1949-ஆம் வருடத்திய 20-வது சட்டம்)

இம்மாகாணத்திலுள்ள சர்க்கரை ஆலைகளையும், அவைகளின் வேலையையும் ஒரு திட்டத்திற்குள் கொண்டுவர இச்சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. அந்த ஆலைகளுக்குத் தேவையான கரும்பை வரவழைத்துக் கொடுக்கவும், கரும்பின் விலையை நிர்ணயம் செய்யவும், குறிப்பிட்ட இடங்களில் பயிர் செய்யப்படும் கரும்பை குறிப்பிட்ட ஆலைகள் கட்டாயமாக விலைக்கு வாங்கும்படி செய்யவும் இச்சட்டத்தில் விதிகள் இருக்கின்றன. அதற்கான அதிகாரிகளும் நியமிக்கப்படுவார்கள். இச்சட்டத்தை மாகாணம் முழுவதிலுமோ அல்லது தேவையான இடங்களிலோ அமுலுக்குக் கொண்டுவர மாகாண சர்க்காருக்கு அதிகாரமுண்டு. இச்சட்டத்தால் கட்டுப்படுத்தப்படும் கரும்பு ஆலைகள் அல்லது தொழிற்சாலைகள் 10 அல்லது அதற்கு மேற்பட்ட வேலையாட்கள் வேலைசெய்துகொண்டிருந்தாலும் சரி, முந்திய ஒரு வருடத்திற்குள் எந்த தினத்திலாவது வேலை செய்திருந்தாலும் சரி போதும். ஆனால், (எலக்ட்ரிசிடி போன்ற) சக்தியின் உதவியைக்கொண்டு 'வாக்வம்பான்ஸ்' விஞ்ஞான முறைப்படி சர்க்கரை தயாரிக்கப்படும் ஆலைகள்மட்டில்தான் இச்சட்டத்தின் கீழ் வரும். இச்சட்டம் அமுலுக்கு வந்த பிறகு மேற்சொல்லப்பட்ட சர்க்கரை ஆலைகள் கரும்பு பிழிவதற்குச் சர்க்காரிடம் லைசென்சு வாங்கிக் கொள்ள வேண்டும். ஒரு தடவை வாங்கிய லைசென்சு 10 வருடங்கள் செல்லும்; மறுபடியும் புதுப்பித்துக்கொள்ள வேண்டும். பிரதி வருடத்திலும் கரும்பு பிழியும் பருவத்தில் அந்த ஆலை எவ்வளவு கரும்பு பிழிய வேண்டுமென்றும், உற்பத்தியாகும் சர்க்கரை எப்படி தரம் பிரிக்கப்படவேண்டுமென்றும், எப்படி மூட்டை கட்டப்பட்டு எப்படி அடையாளமிடப்பட வேண்டுமென்றும் அவைபோன்ற இன்னும் சில முக்கிய நிபந்தனைகளும் அந்த லைசென்சில் கண்டிருக்கும். இந்த லைசென்சை ரத்து செய்யவும், சஸ்பெண்ட் செய்யவும் சர்க்காருக்கு அதிகாரமுண்டு. லைசென்சு இல்லாமல் ஆலை நடத்துவதும், லைசென்சில்கண்ட நிபந்தனைகளுக்கு மாறாக நடப்பதும் குற்றமாகும். குற்றம் ஏற்படும் தினம் ஒன்றுக்கு ரூ. 5000 வரை அபராதம் விதிக்கப்படலாம். கரும்பு பிழியும் 'பருவம்' என்பது ஒவ்வொரு வருடத்திலும் நவம்பர் மாதம் முதல் தேதி முதல் அடுத்த ஜூன் மாதம் முடிவுவரையாகும். ஒவ்வொரு பருவத்திற்கும், ஒவ்வொரு ஆலையும் எவ்வளவு கரும்பு வேண்டுமென்று விபரம் கண்டு இச்சட்டத்திற்காக நியமிக்கப்படும் கரும்பு கமிஷனர் என்ற அதிகாரிக்கு ஒரு உத்தேச மதிப்பு அனுப்பவேண்டும். அவர் அந்த மதிப்பையும், வேறு முக்கிய விஷயங்களையும் கவனித்து, எந்த எந்த ஊர் அல்லது இடங்களில் பயிராகும் கரும்பு ஒரு குறிப்பிட்ட ஆலையில் அந்தப் பருவத்தில் பிழிவதற்காக ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறதென்று விளம்பரப்படுத்துவார். இந்த இடங்களுக்கு 'ரிசர்வ் எரியா' அதாவது ஒதுக்கி வைக்கப்பட்ட இடம் என்று பெயர். இந்த இடங்களை உசிதம்போல் மாற்றவும் இவருக்கு அதிகாரமுண்டு. இவர் செய்தது தவறு என்று சர்க்காருக்கு ஆலைக்

காரரும் அப்பீல் செய்யலாம்; கரும்புப் பயிர் செய்பவரும் அப்பீல் செய்யலாம். பருவகாலம் ஆரம்பிக்குமுன், ஒதுக்கப் பட்ட இடங்களில் கரும்புப் பயிர் செய்பவர் ஒவ்வொருவரும் தம்மால் எவ்வளவு கரும்பு விற்கமுடியுமென்று அந்த இடத்திற்கான ஆலைக்குத் தெரியப்படுத்தவேண்டும். அக் கரும்பை வாங்கிக்கொள்ள ஆலைக்காரர் ஒப் பந்தம் செய்துகொள்ள வேண்டும். இந்த ஒப்பந்தங்களின் ஷரத்துக்கள் எப்படி இருக்கவேண்டுமென்று சர்க்கார் நிர்ணயம் செய்ய அதிகாரமுண்டு. ஆலைக்காரர் கரும்பை வாங்க மறுத்தால் கரும்பு கமிஷ னருக்கு அப்பீல் செய்யலாம். அவர் சொல் வதே இவ்விஷயத்தில் முடிவு. ஒதுக்கப் பட்ட இடங்களில் கரும்புப்பயிர் செய்பவர் கள் குறிப்பிட்ட ஆலைக்குத் தவிர வேறு ஒருவருக்கும் கரும்பை விற்கக் கூடாது. அதேபோல் ஆலைக்காரரும் அக்கரும்பை வாங்க மறுக்கக்கூடாது. (ஆலைக்குத் தேவையான கரும்பு ஜாடாவும் ஏற்கனவே வாங்கஒப்புக்கொண்டுவிட்டால்மட்டில்மேற் கொண்டு கரும்பு வாங்க ஆலைகள் மறுக்க லாம். இச்சந்தர்ப்பத்தில் மட்டில் கரும்புப் பயிர்செய்பவர் வேறு ஒருவருக்குக் கரும் பை விற்கலாம்.) வேறு ஒருவருக்குக்கரும்பு விற்க இன்ஸ்பெக்டர் என்ற அதிகாரியின் அனுமதி வேண்டும்.

ஒவ்வொரு பருவத்திற்கும் கரும்பின் விலை சர்க்காரால் நிர்ணயம் செய்யப்படும். இதற்காக ஒரு ஆலோசனைக் கமிட்டியைக் கலந்து யோசித்த பின்னரே விலை நிர்ணயம் செய்யப்படும். அந்த விலைப்படி ஆலைக்காரர் கரும்புக்கு விலை கொடுக்க வேண்டும். காரணமில்லாமல் ஆலைக்காரர், அந்த ஆலைக் காக ஒதுக்கப்பட்ட கரும்பை வாங்க மறுத் தாலும், சர்க்காரால் நிர்ணயம் செய்யப் பட்ட விலைப்படி கொடுக்க மறுத்தாலும், அவ்விலையில் ஏதாவது பிடித்தங்கள் செய்து கொண்டாலும்,குற்றம். அதற்குஆறுமாதம் வரை சிறைத் தண்டனையும் அல்லது ரூ. 2000வரை அபராதமும் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். அதேபோல் இச்சட்டத் திற்கு மாறாகக் கரும்புப் பயிர் செய்பவர் வேறு ஒருவருக்குக் கரும்பு விற்றாலும், கரும்பை வெளி இடங்களுக்குக் கொண்டு போனாலும் வெளி இடங்களிலிருந்து கொண்டு வந்தாலும் குற்றம். மேலே கண்ட படி தண்டனை விதிக்கப்படலாம். இச்சட் டத்தை அமுல் நடத்த சர்க்கார் விதிகள் செய்ய அதிகாரமுண்டு.

மருந்துகளின் விலை, விற்பனை, கட்டுப்பாடு அவசரச் சட்டம்

சமீபத்தில் நமது ரூபாயின் டாலர் மதிப்பு குறைக்கப்பட்டது. அதன் காரணமாய் அமெரிக்காவிலிருந்து வந்த சாமான்களின் விலை ஏறாமல் பார்த்துக் கொள்வதற்காக 'ஆர்டினன்ஸ்' என்னும் அவசரச் சட்டம் சென்னை கவர்னர் அவர்களால் பிரசுரம் செய்யப்பட்டிருக்கின்றது. இது சென்னை 1949-ஆம் வருடத்திய 3-ஆவது ஆர்டி னன்ஸ் 3-10-1949 முதல் இது அமுலுக்கு வந்துவிட்டது. இச்சட்டம் எந்த எந்த மருந்துகளுக்குப் பிரயோகிக்கப்படுமென்று மாகாணசர்க்கார் அவ்வப்பொழுது கெஜட் டில் விளம்பரம் செய்வார்கள். அவ்விதம் விளம்பரம் செய்யப்பட்ட மருந்துகளை (1) ஒரு வியாபாரி அல்லது உற்பத்தியாளர் எந்த விலைக்கு மேல் விற்கக்கூடாதென்றும். (2) ஒரு சமயத்தில் ஒரு வியாபாரி அல்லது உற்பத்தியாளர் எவ்வளவு அளவுக்கு மேல் கை வசம் வைத்துக் கொள்ளக் கூடாதென் றும் (3) ஒரு கடவையில் ஒருவருக்கே எவ் வளவுக்கு மேல் விற்கக்கூடாதென்றும் - சிவில் சப்ளைஸ் கமிஷனர் தீர்மானிப்பார். அதுவும் கெஜட்டில் பிரசுரம் செய்யப்படும். இவ்விதம் இடத்திற்கேற்றவாறும் வியா பாரிகள் அல்லது உற்பத்தியாளர்களுக் கேற்றவாறும் வெவ்வேறான அளவுகளைக் கமிஷனர் ஏற்படுத்தலாம். அவ்விதம் ஏற் படுத்தப்பட்ட பிறகு அந்த விலைக்கு மேல் ஒரு வியாபாரி அல்லது உற்பத்தியாளர் விற்றாலும், அதில் கண்ட அளவுக்கு மேல்

ஒரே சமயத்தில் சரக்கு வைத்துக் கொண்டிருந்தாலும், ஒரே ஆசாமிக்கு விற்கக் கூடிய அளவுக்கு மேல் விற்றாலும் குற்றமாகும். வியாபாரிகள், உற்பத்தியாளர்களைத்தவிர மற்றப்பொது ஜனங்கள் சம்பந்தப்பட்ட வரையில் கூட ஒரு விதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சில மருந்துகளை ஒருவர் ஒரே சமயத்தில் சொந்த உபயோகத்திற்கு அவசியமான அளவுக்கு மேற்கொண்டு வைத்திருக்கக் கூடாதென்று கமிஷனர் உத்தரவிடலாம். அதற்கு மேல் ஒரே சமயத்தில் வைத்திருப்பதும் குற்றமாகும். இச்சட்டத்தில் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு மேல் ஒருவரிடம் மருந்துகள் இருந்தால் உடனே அதைக் கமிஷனரிடம் தெரிவிக்க வேண்டும். அதைப் பற்றி அவர் சொல்லும் விதம் செய்ய வேண்டும். மருந்து வேண்டுமென்று கேட்பவருக்கு, காரணமில்லாமல், ஒரு வியாபாரி அல்லது உற்பத்தியாளர் விற்க மறுத்தால் அது குற்றமாகும். (இன்னும் கொஞ்ச காலத்திற்குப்பிறகு அம்மருந்துக்கு அதிக விலை வாங்கலாம் என்று சொல்வது ஒரு காரணமாகாது.) ரூ. 5-க்கு மேல் மருந்து வாங்குபவருக்கு கட்டாயமாக விவரம் கண்டு ரசீது கொடுக்க வேண்டும். ரூ. 5-க்குள் வாங்குபவர் ரசீது வேண்டுமென்று கேட்டாலும் கொடுக்க வேண்டும். மருந்துகளின் மேல் எப்படி விலை எழுதி வைக்க வேண்டுமென்றும் விற்பனைக்கு இருக்கும் மருந்துகளின் ஜாப்தாவும் அவைகளில் விலையையும் எப்படி பஹிரங்கப்படுத்தி வைக்க வேண்டுமென்றும் கமிஷனர் உத்தரவு செய்யலாம். ஒரு மருந்தின் பேரில் உற்பத்தியாளரால் விலை கண்டு போடப்பட்டிருக்கும் லேபில்களை வியாபாரி கிழிக்கவும் மாற்றவும் மறைக்கவும் கூடாது. இச்சட்டத்தில் குறிப்பிடப்படும் மருந்துகளையும் வேறு சாமான்களையும் சேர்த்து மொத்த விலைக்கு விற்பவர் அம்மருந்துகளுக்கு மட்டில் விலையைப்பிரித்து எழுத வேண்டும். கமிஷனர் உசிதப்படி தேவையான மருந்துகளை எடுத்துக் கொண்டு விநியோகப்படுத்தலாம். யார் யாருக்கு எவ்விதம் விற்க வேண்டுமென்றும் உத்தரவிடலாம். மருந்து ஒருவரிடமிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டால் அதற்குள்ள விலை சர்க்காரால் கொடுக்கப்படும். இச்சட்டத்தின் எந்த ஷரத்துக்கும் மாறாக நடப்பதுகுற்றமாகும். மூன்று வருடம் வரைசிறைத்தண்டனை அல்லது தேவையான அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். போலீஸ் இன்ஸ்பெக்டர்களும் அல்லது அவருடைய அந்தஸ்துக்கு மேல் உள்ள போலீஸ் உத்தியோகஸ்தர்களும் இதற்காகச் சர்க்காரால் அதிகாரம் கொடுக்கப் பட்ட அதிகாரிகளும் குற்றம் நடந்ததாக கருதப்படும் எந்த இடங்களையும் சோதனை செய்யலாம்; மருந்துகளையும் கைப்பற்றலாம். இச்சட்டத்தை அமுல் நடத்தச் சர்க்காரால் விதிகள் செய்யப்படும்.

(3—10—1949 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் 4 B பக்கம் 157)

இச்சட்டத்தால் கட்டுப்படுத்தப் பட்ட மருந்துகள் ஜாப்தா; விலை நிர்ணயம்

[குறிப்பு: எந்த எந்த மருந்துகள் இச்சட்டத்திற்குள் வரும் என்று குறிப்பிட மாகாண சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது. அதை அனுசரித்து சென்னை சர்க்கார் எந்த மருந்துகளுக்கு இச்சட்டம் உபயோகிக்கப்படுமென்று ஒரு பெரிய ஜாப்தா விளம்பரப்படுத்தியிருக்கின்றனர். மேலும் அம்மருந்துகளை சில்லரையாக விற்றால் எந்த விலைக்கு மேல் விற்கக் கூடாதென்று நிச்சயிக்க சென்னை சிவில் சப்ளைஸ் கமிஷனருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தின்படி அவ்வதிகாரியால் ஒவ்வொரு மருந்துக்கும் விலையும் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்றது. மருந்து ஜாப்தாவும் விலையும் 3—10—1948 தேதியுள்ள போர்ட் செயின்ட் ஜார்ஜ் கெஜட் (சென்னை சர்க்கார் கெஜட்) விசேஷ வெளியீடு-பாகம் II, 1. முதல் 12 வரையில் உள்ள பக்கங்களில் கொடுக்கப் பட்டிருக்கின்றது.]

கடனும் - வட்டியும்

(V. S. விஜயராகவாச்சாரி B. A., B. L.)

விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம்

கடன் சம்பந்தமாய், சமீப காலங்களில் ஏற்பட்ட சட்டங்களுக்குள் இச்சட்டத்தை போல் கடனாளிகளுக்குப் பரிகாரம் அளித்த சட்டம் வேறு ஒன்றும் கிடையாது. இச் சட்டம் முதலில் 1938-ல் அமுலுக்கு வந்தது. அதற்குப் பிறகு 1943-லும் 1948-லும் 1949-லும் இச்சட்டத்தின் பல முக்கிய பாகங்கள் திருத்தப்பட்டும் சில புதிய அம்சங்கள் சேர்க்கப்பட்டும் இருக்கின்றன. முதலில் பரிகாரம் அளிக்கப்படாத சில நபர்களுக்கும் சில கடன்களுக்கும் புதிதாக நிவாரணம் அளிக்கப்பட்டன. இச்சட்டம் சென்னை மாகாண 1938-ஆம் வருடத்திய 4-ஆவது சட்டம் எனப்படும். முதலில் 22—3—1938-ல் அமுலுக்கு வந்தது.

"விவசாயி" களுக்கு மட்டில் இச்சட்டம்: இச்சட்டப்படி கடன் தொகையிலும் வட்டியிலும் பரிகாரம் அடையக்கூடியவர்கள் "விவசாயி" களாயிருப்பவர்கள் தான். "விவசாயி" அல்லாதவருக்கு இச்சட்டம் உதவியளிக்காது. ஆகையால் இச்சட்டத்தின் ஷரத்துக்களை ஆராய்வதற்கு முன் "விவசாயி" என்பது இச்சட்டத்தில் யாரைக் குறிப்பிடும்? அதற்கு என்ன அருகதை இருக்கவேண்டும்; அவ்வித அருகதை எப்பொழுது இருக்க வேண்டும். இவ்விஷயங்களை முதலில் தெரிந்துகொண்டு பிறகு எவ்வகைப்பட்ட கடன்களுக்கு இச்சட்டம் நிவாரணம் அளிக்கின்றது; எவ்விதம் நிவாரணம் அளிக்கின்றது; நிவாரணம் எப்படி அடைவது என்று கவனிப்போம்.

"விவசாயி" என்பவருக்குக் கீழே கண்ட பாத்தியங்களில் ஏதேனும் ஒன்றுவது இருக்க வேண்டும்:-

(1) சென்னை மாகாணத்தில் உள்ள விவசாய அல்லது தோட்டப்பயிர் செய்யக்கூடிய நிலங்களில் ஏதாவது பாத்தியம் உள்ளவராக இருக்கவேண்டும். அதாவது நிலத்தின் சொந்தக்காரராக இருக்கலாம்; நிலத்தின் பேரில் ஒத்தி, போக்கியம், பெருதகம், அடமானம் போன்ற பாத்தியங்கள் உள்ளவராக இருக்கலாம்; விற்பனை செய்யக்கூடிய எந்தப் பாத்தியமாக இருந்தாலும் போதும். ஆனால் அவ்விதம் பாத்தியமுள்ள நிலங்கள் முனிசிபாலிடி, கண்ட்டோன்மெண்ட் எல்லைகளுக்குள் இருக்கக்கூடாது.

(2) ஜமீன் இனும் கிராமங்களில் குடிவார பாத்தியம் அல்லது சாகுபடி பாத்தியம் உள்ளவர்.

(3) மலையாள குடிக்காணி பாத்தியச் சட்டப்படி நிலங்களில் பாத்தியமுள்ளவர்.

(4) மேற்கண்ட மூன்றுவகை நிலங்களில் எதையாவது குத்தகை அல்லது உட்குத்தகைக்கு வைத்துக் கொண்டிருப்பவர்.

இந்த நான்கு வகைப் பாத்தியங்களில் ஏதாவது ஒன்று இருந்தால் போதும். ஒரு வகைப் பாத்தியம்கூட இல்லாவிட்டால் அவர் "விவசாயி"யே அல்ல. ஆனால் இவ்விதப் பாத்தியம் இருப்பது மட்டில் போதாது. கீழே கண்ட விவரப்படிக்குள்ள நான்கு வரிகளில் ஒன்றும் விதிக்கப்படாதவராக இருக்கவேண்டும். அதாவது ஒருவருக்கு நிலம் இருந்த போதிலும் அவர் கீழ்க்கண்ட வரிகள் கொடுக்க வேண்டியவராக இருந்தால் அவர் "விவசாயி" ஆக மாட்டார். அவையாவன:-

1. வருமான வரி: இந்திய சட்டப் படிக்கோ அல்லது இந்திய சமஸ்தானச் சட்டப்படிக்கோ அல்லது வேறு அன்னிய நாட்டுச் சட்டப்படிக்கோ இன்கம்டாக்ஸ் என்ற வருமான வரி குறிப்பிட்ட இரண்டு வருடங்களுக்குச் சேர்ந்தாற்போல் விதிக் கப்பட்டவர் விவசாயி ஆகமாட்டார். இச்சட்டம் அமுலுக்கு வந்தபோது (22—3—1938-ல்) ஒருவருக்குக் கடன் இருந்து அவருக்கு 31—3—1938 உடன் முடியும் இரண்டுவருடங்களுக்கும் வருமான வரி விதிக்கப்பட்டிருந்தால் அவர் "விவசாயி" ஆகமாட்டார். இச்சட்டப்படி பரிகாரம் கேட்கத் தகுதியற்றவர். இச் சட்டத் தேதிக்குப் பிறகு (22—3—1938 க்குப் பிறகு) கடன் வாங்கியவர் கடன் வாங்கிய தேதிக்கு முன் உள்ள மார்ச்சு மாதம் 31-ஆம் தேதியுடன் முடிவடையும் இரண்டு வருடங்களுக்கும் இன்கம்டாக்ஸ் விதிக்கப்பட்டிருந்தால் அவர் "விவசாயி" ஆகமாட்டார்.

2. தொழில் வரி: சென்னைப்பட்டணத் திற்கு ஒரு முனிசிபல் சட்டமும், மற்ற முனிசிபாலிடிகளுக்கு ஒரு முனிசிபல் சட்ட மும் இருக்கின்றன. அதேபோல் கண்ட் டோன்மெண்டுகளுக்கும் ஜில்லா போர்டு, பஞ்சாயத்து முதலிய ஸ்தலஸ்தாபனங் களுக்கும், மற்ற மாகாணங்களிலும், சமஸ் தானங்களிலும், இந்தியாவிலுள்ள அந்நிய ராஜ்யங்களிலும் ஸ்தலஸ்தாபனங்களைக் குறித்த சட்டங்கள் இருக்கின்றன. இச் சட்டங்களின்படி முனிசிபாலிடி முதலிய வைகள் அவரவர்களுடைய எல்லைக்குள் வசிப்பவருக்கு ஒவ்வொரு அரை வருடத் திற்கும் ஒரு தொழில் வரி விதிக்கலாம். அப்படி ஒரு அரை வருஷத்திற்கு ஒரு வருக்கு வருமானம் ரூ. 600-க்கு மேற் கொண்டு வருவதாகக் குறிப்பிட்ட நான்கு அரைவருடங்களுக்கு அவருக்குத் தொழில் வரி விதிக்கப்பட்டிருந்தால் அவர் 'விவசாயி' ஆகமாட்டார். பஞ்சாயத்தாக இருந்தால் அது 26—8—1930-க்கு முன் உள்ள சட்டப்படி யூனியனாக இருக்கவேண் டும். இச்சட்டம் அமுலுக்கு வரும்போது (22—3—1938) ஒருவருக்குக் கடன் இருந்தால் அவர் அதற்கு முன் முடி வடைந்த 4 அரை வருடங்களுக்கும் மேற் கண்ட தொழில் வரி விதிக்கப்பட்டிருந்தால் தான் விவசாயி ஆகமாட்டார். அதே போல் இச்சட்டத் தேதிக்குப் பின் கடன் வாங்கியவர் அக்கடன் ஏற்பட்டதற்குமுன் உள்ள நான்கு அரைவருடத்திற்கும் மேற் கண்டபடி தொழில் வரி விதிக்கப்பட் டிருந்தால்மட்டில் அவர் விவசாயி ஆகமாட் டார். (அரைவருடம் என்பது மார்ச்சு 31 - ஆம் தேதியுடனும், செப்டம்பர் 30 - ஆம் தேதியுடனும் முடிவடையும் அரை வருடம்.)

3. வீட்டுவரி அல்லது சொத்துவரி: மேலே சொல்லப்பட்ட முனிசிபாலிடி, முதலிய ஸ்தல ஸ்தாபனங்கள் தங்கள் தங்கள் எல் லைக்குள் உள்ள வீட்டிற்கும் (விவசாயத்திற் கல்லாத மற்ற) நிலத்திற்கும் ஒவ்வொரு அரை வருடத்திற்கும் வீட்டு வரி விதிக்க லாம். ஒரு வீட்டிற்கு ஒரு வருடத்திற்கு என்ன வாடகை வரலாம் என்ற வருட வாடகை மதிப்பின் பேரில் இந்த வீட்டுவரி கள் போடப் பட்டு வருகின்றன. ஒரு வரு டத்திற்கு ஒரு வீடு அல்லது சொத்திற்கு ரூ. 600-க்குக் குறையாமல் வாடகை மதிப் புப் போட்டு அதற்கு ஒருவருக்குக் குறிப் பிட்ட நான்கு அரை வருடங்களுக்கும் வீட்டுவரி விதிக்கப்பட்டிருந்தால் அவர் 'விவசாயி' அல்ல இச்சட்டம் அமுலுக்கு வந்த தேதியாகிய 22—3—1938-ல் ஒரு வருக்குக் கடன் இருந்தால் அவர் அதற்கு முன் உள்ள நான்கு அரை வருடங்களுக்கும் இவ்விதம் வரி கொடுத்திருந்தால் தான் விவ சாயி ஆகமாட்டார். அதே போல் இச்சட் டத்திற்குப் பின் கடன் வாங்கியவர் கடன் ஏற்பட்ட தேதிக்கு முன் முடிவடையும் நான்கு அரை வருடங்களுக்கும் மேற்கண்ட படி வீட்டுவரி விதிக்கப்பட்டிருந்தால் மட் டில் அவர் விவசாயி ஆகமாட்டார். (சில சமயம் வீட்டின் வாடகை மதிப்பில்லாமல் வீட்டின் அல்லது ஒரு சொத்தின் மொத் தப் பொறுமானத்தின் பேரில் வரி போடப் படலாம். அப்படி இருந்தால், மொத்தப் பொறுமானத்திற்கு 100-க்கு 5 வீதம் கணக்குச்செய்த தொகையையே வருடாங்

திர வாடகை மதிப்பு என்று வைத்துக் கொள்ளவேண்டும்.)

4. சென்னை எஸ்டேட் லாண்ட் ஆக்ட்படிக்குள்ள ஒரு ஜமீன்தார் அல்லது இனும்தார் வருடத்திற்குச் சர்க்காருக்கு ரூ. 500-க்கு மேல் பெஷ்குஷ் கொடுக்க வேண்டி இருந்தாலும் ரூ. 100-க்கு மேல் க்விட் ரெண்ட், ஜோடி, கட்டுபாடி, பொறுப்பு போன்ற வரிகள் கொடுக்க வேண்டி இருந்தாலும், மலையாளத்தில் ரூ. 500-க்கு மேல் நிலவரி கொடுக்கவேண்டிய ஜமீனாக இருந்தாலும் 'விவசாயி' ஆகமாட்டார்.

குறிப்பு: மேற்கண்டபடி தொழில் வரி அல்லது வீட்டு வரி விதிக்கப்பட்ட காரணத்தால்மட்டில் ஒருவர் 'விவசாயி' என்ற அந்தஸ்தை இழந்தால்: அதாவது, ஒருவருக்கு நிலத்தில் பாத்தியமிருந்து இச்சட்டத்தில் கண்டபடி தொழில் வரி அல்லது வீட்டுவரி விதிக்கப்பட்டிருந்தால் கூட அவருக்கும் சில சலுகைகள் 1948-ஆம் வருடத்திய திருத்தச் சட்டப்படி ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அதாவது, இச்சட்டத்திற்குப் பின் ஒரு "விவசாயி" என்ன வட்டி கொடுக்கவேண்டுமோ அந்தப்படி இவரும் குறைந்த வட்டி கொடுத்தால் போதும்.

"விவசாயி" யாக இருந்தாலும் சில கடன்களுக்கு இச்சட்டம் கிடையாது:

1. மாகாண சர்க்காருக்கு ஒரு விவசாயி கொடுக்கவேண்டிய வரி, செஸ், கடன் முதலியவை.

2. மத்திய சர்க்காருக்கு ஒரு விவசாயி கொடுக்கவேண்டிய வரி, செஸ், கடன் முதலியவை.

3. முனிசிபாலிடி, ஜில்லா போர்டு, பஞ்சாயத்து போர்டு போன்ற ஸ்தலஸ்தாபனங்களுக்குக் கொடுக்க வேண்டிய வரி, கடன் முதலியவை.

4. முனிசிபாலிடி, கண்ட்டோன்மெண்ட், அல்லது 26—8—1930 - க்கு முன் யூனியனாக இருந்த பஞ்சாயத்து இந்த எல்லைகளுக்குள் இருக்கும் வீட்டின் அடமானம் அல்லது சொத்துப் பாத்தியத்தின் பேரில் மட்டில் ஏற்பட்டிருக்கும் கடன்கள்.

5. கோவாபரேடிவ் சங்கங்களுக்கும் பிரத்யேக சட்டத்தால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஸ்தாபனங்களுக்கும் கொடுக்க வேண்டிய கடன்கள்.

6. நம்பிக்கை மோசம் செய்ததால் ஒருவர் கொடுக்கும்படி நேரிடும் கடன்கள்.

7. ஜீவனும்சத்திற்காகக் கொடுக்க வேண்டிய தொகைகள்—டிக்ரி இருந்தாலும் இல்லாவிட்டாலும்.

8. ஒரு ஸ்திரீக்கு 1—10—1937 - ல் கொடுக்கவேண்டிய கடன்கள் — ஆனால், அத்தேதியில் அவருடைய சொத்து (அவளுக்குச் சேரவேண்டிய கடன்களின் அசல் தொகை உள்பட) ரூ. 6000 - க்கு மேல் மதிப்பு இருக்கக்கூடாது. இப்படி கணக்குச் செய்யும் போது அந்த ஸ்திரீ வசிக்கும் வீடு, தட்டுமுட்டுசாமான்கள், சமையல் பாத்திரங்கள், துணி, நகைகள் இவைகளை நீக்கி, கணக்குச் செய்ய வேண்டும்.

9. ஒரு விவசாயத் தொழிலாளிக்குக் கொடுக்க வேண்டிய கூலி பாக்கி.

மேலே கண்ட ஒன்பது வகைக்கடன்களைக் கொடுக்க வேண்டியவர் ஒரு 'விவசாயி' யாக இருந்தாலும் அவருக்கு இச்சட்டத்தால் யாதொரு அனுகூலமும் இல்லை.

அவிபக்த ஹிந்து குடும்பம்: ஒரு பிரிபடாத ஹிந்து குடும்பத்திற்கு நிலங்கள் முதலியன இருந்தும் வருமான வரி, தொழில் வரி, வீட்டு வரி, பேஷ்குஷ் இவைகள் கொடுக்கும் காரணத்தினால் "விவசாயி" அல்ல என்று இருந்தால் 1—10—1937-ல் அக்குடும்பத்தில் பங்காளியாக இருந்தவர் எவரும் 'விவசாயி' ஆகமாட்டார். ஒரு அவிபக்த குடும்பம் விவசாயியாக இருந்தும்

18)691

கூட அதில் ஒருவர் மட்டில் (வரி முதலியன கொடுக்கும் காரணத்தால்) விவசாயி அல்லாமல் இருந்தால் அவருடைய மகன்கள் பேரன்கள் முதலிய ஆண் சந்ததிகளும் விவசாயிகள் ஆகமாட்டார்கள். இச்சட்டத்திற்கு பின் வாங்கப்படும் கடனுக்கு இந்த விதி கிடையாது.

இச்சட்டப்படி ஒரு கடனுக்குள்ள வட்டி எவ்வளவு குறையும், அசல் தொகை எவ்வளவு கொடுக்க நேரிடும் என்று கணக்குச் செய்யுமுன், கடன் கொடுக்கவேண்டியவர் இச்சட்டப்படி அனுகூலமடைய தகுதியுள்ளவரா என்று நிச்சயம் செய்யவேண்டியிருப்பதால் மேலே சொல்லப்பட்ட விதிகளைச் சில உதாரணங்களைக் கொண்டு தெளிவுபடுத்த வேண்டியது அவசியமாகும்.

உதாரணங்கள் :

(1) ஒருவர் விவசாயத்தால்தான் ஜீவனம் செய்கிறார். ஆனால் சொந்த நிலம் குத்தகை முதலியன ஒன்றும் கிடையாது. இவர் விவசாய சம்பந்தமான கூலிவேலைகளைச் செய்தே தம் வாழ்நாளைக் கழித்தாலும் இச்சட்டப்படி இவர் 'விவசாயி' அல்ல. இவர் வாங்கிய கடனுக்கு இச்சட்டம் ஒரு பரிகாரமும் அளிக்காது.

(2) ஒருவர் விவசாய நிலத்தின் பேரில் அடமானமாகக் கடன் கொடுத்திருக்கிறார். அவருக்குச் சொந்த நிலமாவது குத்தகை முதலியவையாவது ஒன்றும் கிடையாது. நிலங்களைப் பார்க்கவேண்டிய அவசியம்கூட இவருக்குக் கிடையாது. இவர் 'விவசாயி'. ஏனென்றால் இவருக்கு விவசாய நிலத்தின் பேரில் ஒரு "விற்கக்கூடிய பாத்தியம்" இருக்கின்றது. இவர் வாங்கும் கடன்களுக்கு இச்சட்டப்படி நிவாரணமுண்டு.

(3) ஒருவருக்கு நிலம் சொந்தமாக இல்லை. ஆனால் குத்தகைக்கு ஒப்புக்கொண்டு சாகுபடி செய்கிறார். குத்தகை எழுத்து மூலம் இருந்தாலும் வாய்மொழியாக இருந்தாலும் இவர் விவசாயி.

(4) ஒருவருக்கு ஆயிரம் ஏகருக்கு மேல் திறப்பு நிலங்கள் இருக்கின்றன. ஆயிரக் கணக்கில் சர்க்காருக்குத் தீர்வை செலுத்துகிறார். நிலங்களை நேரில் சாகுபடி செய்வதில்லை. குத்தகைக்கு விட்டு உவனவாசமாகவே இருக்கின்றார். இவர் டாம்பீகமான வாழ்விற்காக ஏராளமான கடன் வாங்கிவிட்டார். இவருக்கு பரிகாரம் உண்டு.

(5) ஒருவருக்குக் கிராமத்தில் ஒரு வீடும் அதைச் சேர்ந்த மனைமட்டில் இருக்கிறது. விவசாயம் அல்லது தோட்டப்பயிர் செய்யக்கூடி பூமி இல்லை. இவர் "விவசாயி" அல்ல.

(6) ஒருவருக்கு விவசாய நிலங்கள் இருக்கின்றன, ஆனால் அவை முனிசிபல் எல்லைக்குள்ளேயேதான் இருக்கின்றன. இவர் "விவசாயி" அல்ல.

(7) 'விவசாயி' க்கு முனிசிபல் எல்லைக்குள் ஒரு வீடு இருக்கின்றது, அந்த வீட்டைமட்டில் அடமானமாக வைத்துக் கடன் வாங்குகிறார். இக்கடனுக்கு இச்சட்டம் கிடையாது.

(8) ஒரு விவசாயி தமக்குச் சொந்தமாய் முனிசிபல் எல்லைக்குள் இருக்கும் வீட்டையும், வேறு நிலங்களையும் சேர்த்து அடமானமாக வைத்துக் கடன் வாங்குகிறார். இவருக்கு இச்சட்டப்படி பரிகாரம் உண்டு.

(9) கிராமத்தில் நிலங்கள் உள்ள ஒரு விவசாயி முனிசிபல் எல்லைக்குள் தமக்குச் சொந்தமாயுள்ள ஒரு காலி மனையைமட்டில் அடமானமாக வைத்துக் கடன் வாங்குகிறார். இக்கடனுக்கு இச்சட்டப்படி பரிகாரம் உண்டு.

எந்தத் தேதியில் "விவசாயி" யாக இருந்தால் நிவாரணம் கிடைக்கும் :

1. இச்சட்டம் அமுலுக்கு வந்தது 22—3—1938-ல். அதற்கு முன் கடன் ஏற்பட்டிருந்தால் கடன் கொடுக்கவேண்டியவர் 1—10—1937-லும், 22—3—1938-லும் விவசாயியாக இருந்தால்தான் பரிகாரம் கிடைக்கும்.

2. இச்சட்டம் அமுலுக்கு வந்த பிறகு (22—3—1938-க்குப் பிறகு) கடன் ஏற்பட்டால் கடன் வாங்கியவர் கடன் வாங்கும் தேதியில் விவசாயியாக இருந்தால்தான் பரிகாரம் கிடைக்கும்.

இச்சட்டத்தின் ஷரத்துக்களை உபயோகப்படுத்த ஒரு விவசாயியின் கடன்களை நான்கு வகைகளாகப் பிரிக்கலாம்.

அதாவது: (1) 1—10—1932-க்கு முன் ஏற்பட்ட கடன் (2) 1—10—1932-க்குப் பிறகு 22—3—1938 (இச்சட்டம் அமுலுக்கு வந்த தேதி) க்கு முன் ஏற்பட்ட கடன் (3) 22—3—1938-க்குப்பின் ஏற்பட்ட கடன் (4) ஒத்தி அல்லது போக்கியங்கள். இவைகளை ஒவ்வொன்றாகக் கவனிப்போம்.

1—10—1932-க்கு முன் ஏற்பட்ட கடன்: இக்கடனுக்கு (1) 1—10—1937-ம் தேதியில் (ஏற்கனவே கொடுக்கப்பட்ட வட்டி போக பாக்கி) கொடுக்க வேண்டியதான ஜாடா வட்டியும் ரத்தாகி விடும். (2) கடன் வாங்கியவர் இச்சட்டத்தேதி வரை ஒரு கடனுக்காகக் கொடுத்திருக்கும் எல்லா அசல் வட்டித் தொகைகளும் சேர்ந்து அசலைப்போல் இரண்டு மடங்கு கொடுக்கப்பட்டிருந்தால் அக்கடன் ஜாடாவும் ரத்தாகும். (3) அல்லது அதுவரை கொடுக்கப்பட்டிருக்கும் தொகை இரட்டிப்பு அசல் தொகைக்கு எவ்வளவு குறைகின்றதோ அது அசலை விடக் குறைவாக இருந்தாலும் அப்படி குறையும் தொகையைக் கொடுக்க வேண்டும். (4) ஆனால் இவ்விதம் கணக்குச் செய்யும் தொகையை விட அதிகமாகவே கடன்கொடுத்தவருக்குக் கொடுக்கப்பட்டிருந்தால் அப்படி அதிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கும் தொகையை அவர் திருப்பிக் கொடுக்க வேண்டியதில்லை. (5) கடன் வாங்கியவர் கொடுத்த தொகை அசலுக்கா, வட்டிக்கா என்ற சந்தேகம் வந்தால், வட்டிக்காக கொடுக்கப்பட்டதென்று அவர் வியக்தமாய் எழுத்து மூலம் தெரிவித்தாலொழிய அத்தொகை அசலுக்குத்தான் கொடுத்ததாக ஏற்படும். (6) மேலும் ரொக்கமாய்க் கடன் வாங்கிவிட்டு நெல் முதலிய தானியமாக அதைத் திருப்பிக் கொடுப்பதாக ஒப்புக் கொண்டிருந்தாலும், திருப்பிக் ரொக்கமாகக் கொடுத்தால் போதும், அதுவரை கொடுத்திருக்கும் சாமான்களின் விலையைக் கணக்குச் செய்து கழித்துக் கொண்டு, பாக்கியைக் கொடுத்தால் போதும். (7) ஒரு கடனைப் புதிப்பித்து, புதிய தஸ்தவேஜுகள் ஏற்பட்டிருந்தாலும் ஆரம்பத்தில் கொடுக்கப்பட்ட அசல் தொகையும் பிறகு மேற்கொண்டு கொடுக்கப்படும் அசல் தொகையும் தான் 'அசல்' எனப்படும். பாக்கி எல்லாம் 'வட்டி' என்றே கருதப்படும். புதிப்பித்த தஸ்தவேஜி இச்சட்டத்திற்கு முன் ஏற்பட்டிருந்தாலும், பின் ஏற்பட்டிருந்தாலும், அதே கடன்காரர் எழுதிக் கொடுத்திருந்தாலும் வேறு ஒருவர் எழுதிக் கொடுத்திருந்தாலும், வேறு எவர் பெயருக்குப் புதுப்பிக்கப் பட்டிருந்தாலும் மேற்கண்ட தொகை தான் அசல் தொகையாகும். (8) 22—3—38-க்குப்பின் அசல் தொகை வருடம் 1-க்கு ரூ. 100-க்கு வட்டி ரூ. 6—4—0.

1—10—1932உக்குப்பின் (22—3—38-க்கு முன்) ஏற்பட்ட கடன்: (1) இச்சட்டத் தேதிவரை வருடம் 1-க்கு 100-க்கு 5 வீதம் வட்டி கணக்குச் செய்து, அதுவரை வட்டிக்காகக் கொடுக்கப்பட்டிருந்த தொகைகளைக் கழித்து பாக்கி வட்டி இருந்தால் அதைமட்டில் வட்டிக்காகக் கொடுத்தால் போதும். (2) புதுப்பிக்கப்பட்ட கடனாக இருந்தால், ஆரம்பத்தில் ஏற்பட்டக் கடன் 1—10—1932உக்கு முன் இருந்தால், அது முன் சொன்னபடி 1—10—1932உக்கு முன் ஏற்பட்ட கடனாகப் பாவிக்கப்படும். (3) இதிலும் கடன் கொடுத்தவருக்கு இச்சட்டத்திற்கு முன், என்ன தொகைகள் கொடுக்கப்பட்டிருந்தாலும் அவர் அதைத் திருப்பிக் கொடுக்கவேண்டியதில்லை. (4) இக்கடன்களுக்கு 22—3—1938-க்குப் பிறகு வருடம் 1-க்கு ரூ. 100-க்கு வட்டி ரூ. 6-4-0.

(தொடரும்)

கேள்வியும் - பதிலும்

இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் சுருக்கமாய் இருக்கவேண்டும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் அபிப்பிராயமே.

கேள்வி: (L 1659 B. K. M. பூதலூர்) பல பங்குதாரர்களுக்குச் சொந்தமான சமுதாயப் பட்டா நிலத்தை பட்டாவில் கண்ட ஒருவர் சீர்திருத்தம் செய்து தனிமையில் அனுபவித்து வந்தால் மற்றப்பங்குதாரர்கள் அதைத் தடுக்க முடியுமா? வியாஜ்யம் தொடுக்கக் காலாவதி உண்டா?

பதில்: மற்றப் பங்குதாரர்கள் அதைத் தடுக்க முடியாது. ஆனல் அவர்கள் பாக வியாஜ்யம் தொடரலாம். காலாவதி கிடையாது.

கேள்வி: (L 1660 K. S. K. மூர்த்தி, குத்தாலம்) பகுத்தறிவுப் போட்டிகள் நடத்துவது பற்றி ஏதாவது சட்டங்களும் விதிகளும் உண்டா?

பதில்: இந்தியன் பீனல் கோடு 294 A செக்ஷன்படி மாகாண சர்க்காரிடம் அனுமதி பெற்றுக்கொண்டு நடத்துவது உசிதம்.

கேள்வி: (L 1680 முத்தசாமி, டாம்புசேரி) ஒத்தி வாங்கியவர் ஒத்தி எழுதிக் கொடுத்தவருக்கே ஒத்தி சொத்துக்களைக் குத்தகைக்கு விட்டிருந்தால் ஒத்தி தொகையில் குறைவு ஏற்படுமா?

பதில்: "வக்கீல்" அக்டோபர் இதழ் பக்கம் 26-ல் "கேள்வி-பதில்" என்ற தலைப்பில் பார்க்கவும்.

கேள்வி: (L 1686 குப்புசாமி கவுண்டர், முத்தூர்) கிராம முன்சீப் அல்லது கர்ணம் இவர்கள் பஞ்சாயத்து போர்டில் மெம்பராகவோ பிரசிடெண்டாகவோ இருக்கலாமா?

பதில்: இப்பொழுது அமுலிலிருக்கும் சட்டப்படி முடியாது.

கேள்வி: (L 1692 கிருஷ்ணன், திருநெல்வேலி) ஒருவர் கோழிப்பண்ணை வைத்து நடத்த வேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். அதற்கு அவர் என்ன செய்யவேண்டும்? முட்டை விற்பனை செய்யும்போது அதற்கும் விற்பனை வரி உண்டா?

பதில்: கோழிப்பண்ணை வைப்பதுபற்றி விவசாய இலாகாவைக் கேட்கவும். ஆனல் அதிலிருந்து கிடைக்கும் முட்டைகளை வியாபாரம் செய்வதில் வருடம் ஒன்றுக்கு ரூபாய் 10,000 மொத்த வியாபாரம் நடந்தால் விற்பனை வரி கொடுக்கவேண்டும்.

கேள்வி: (1710 அப்துல் ரஹீம், அறியாவூர்) 1908-ஆம் வருடத்திய எஸ்டேட்

டின் தன்மையும், 1936-ஆம் வருடத்திய எஸ்டேட்டின் தன்மையும் என்ன?

பதில்: 1949 ஜூன் மாத "வக்கீல்" இதழில் விவரமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

கேள்வி: (ஷ) ஒரு முஸ்லீம் பெண், குழந்தை இல்லாமலும், நெருங்கிய வார்சுகள் இல்லாமலும் இறந்துவிட்டால், அதில் அவருடைய கணவனுக்கு எவ்வளவு பாத்தியம்? தகப்பன் வழியில் உள்ள தூரத்துப் பந்துக்களுக்கு என்ன பாத்தியம்?

பதில்: கணவனுக்குப் பாதியும், தூர பந்துவுக்குப் பாதியும் பாத்தியம்.

கேள்வி: (L 1712. சாம்பசிவ செட்டியார், ஆடுதுறை) கைத்தறி ஜவுளி மொத்த வியாபாரம் செய்யும் வியாபாரி சில்லறை வியாபாரமும் செய்யலாமா? அப்படிச் செய்தால் சில்லறை விற்பனைக்குத் தனியாகப் பேரேடு போட்டுக்கொண்டால், விற்பனை வரி விலக்களிக்கப்படுமா?

பதில்: சில்லறை வியாபாரமும் செய்யலாம். ஆனல், விற்பனை வரிக்காக மொத்தத் தொகை கணக்குச் செய்யப்படுவதில் மொத்த வியாபாரம் செய்த தொகை கழித்துக் கொள்ளப்படும். தனித் தனியே கணக்குகள் இருக்கவேண்டும். மொத்த வியாபாரம்மட்டில் செய்தால்தான் வரி விலக்கு உண்டு. (மொத்த வியாபாரம் என்பது வேறு ஒரு வியாபாரிக்கு விற்பது. ஜவுளியை உபயோகப்படுத்தும் ஒருவருக்கு ஏராள ஜவுளிகளை விற்பது மொத்த வியாபாரமாகாது.)

கேள்வி: (L 1721 பாலவிட்டல் நாதன், உடுமலை) ஒரு வியாபாரிக்கு ஏப்ரல் முதல் தேதி முதல் மார்சு 31 தேதி முடிய உள்ள ஒரு வருடத்தில் ரூ. 10,000-க்கு மேற்பட்ட வியாபாரம் நடந்தால் விற்பனை வரி தரவேண்டியது சட்டம். ஆனல் ஒரு வருடத்தில் கடைசி 5 அல்லது 6-மாதத்தில் மாத்திரம் ரூ. 10,000-க்குள் விற்பனை செய்தால் அதற்கு அந்த வியாபாரி விற்பனை வரி கொடுக்கவேண்டுமா?

பதில்: வேண்டியதில்லை.

கேள்வி: (L 1741 நாச்சியப்பன், சிலோன்) தன் மனைவியிருக்க வேறு ஒரு பெண்ணை ரிஜிஸ்டர் கலியாணமாகச் செய்துகொண்டு ஒருவர் முதல் மனைவியைக் கவனியாதிருந்தால் இந்தியாவில் இப்போதுள்ள சட்டப்படி முதல் மனைவி ஜீவனும்ச வழக்குப் போடலாமா? அல்லது வேறு வழி உண்டா?

பதில்: இந்தியாவில் உள்ள சட்டப்படி (ஸ்பெஷல் மாரியேஜ் ஆக்ட்) முதல் மனைவி இருக்கும்போது ரிஜிஸ்டர் கலியாணம் செய்துகொள்ள முடியாது. அப்படிச் செய்தால் அக்கலியாணம் செல்லாது. குற்றமுமாகும். இரண்டாவது கலியாணம் எப்படிப் போனலும் முதல் மனைவி ஜீவனும்சம் கேட்கலாம்.

கேள்வி: (L 1763 M. E. பரம், புதூர்) ஒருவர் (ஹிந்து) இறந்துபோய் அவருக்கு மனைவியும் பெண்களும் இருந்தால் அவர் பெயரால் உள்ள ஸ்தாவரசொத்தை மனைவி பெண்களுக்குச் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதினல் அது பூரணமாகச் செல்லுமா? எழுதி வைத்தவரே செட்டில்மெண்டை மாற்ற முடியுமா?

பதில்: இறந்த ஹிந்துவினுடைய சொத்தை அவர் மனைவி ஆயுள் வரை அனுபவிக்கலாம், அப்படி அனுபவிக்கும் பாத்தியத்தைத்தான் தன் மகளுக்குச் செட்டில்மெண்ட் செய்யலாம். சரியாகச் செய்யப்பட்ட செட்டில்மெண்டை ரத்து செய்ய முடியாது.

கேள்வி: (L 1779 வைத்தினுதசுவாமி, கீழப்பாலயூர்) போக்கியம் (அனுபோக ஒத்தி) பெற்றவர் 30 வருட காலம் நிலத்தை அனுபவித்து விட்டால் ஜாடா கடனும் ரத்து என்பது இனிமேலும் ஏற்படப் போகும் அனுபோக ஒத்திகளுக்கும் உண்டா?

பதில்: இல்லை.

கேள்வி: (L 1791 நாகராஜன், ராசீபுரம்) சென்னை மாகாணத்தில் லைசென்சு பெற்ற

ஒரு மொத்தக் கைத்தறி ஜவுளி வியாபாரி மைசூர் முதலிய ஸ்டேட்களுக்கு 1948-49 வருடத்தில் கைத்தறி ஜவுளிகளை அனுப்பி விற்பனை செய்திருந்தால் அந்த விற்பனைத் தொகைக்கு விற்பனை வரி உண்டா?

பதில்: மொத்த வியாபாரம் மட்டில் செய்து அதற்காக லைசென்சும் பெற்றிருந்து மாகாணத்திற்கு வெளியில் சரக்கும் அனுப்பப்பட்டுவிட்டால் மட்டில் விற்பனை வரி கிடையாது.

கேள்வி: (L 1802 G. R. பால கிருஷ்ணன், திருச்சி) ஒரு கடையில் வேலை செய்யும் சிப்பந்தி ஒரு மாதத்திற்கு எத்தனை நாள் லீவ் எடுத்தால் முதலாளிகள் சம்பளம் பிடிக்கமாட்டார்கள். ஒரு வருடத்திற்குக் காஷ்வல் லீவ், சிக் லீவ் எத்தனை நாள்?

பதில்: ஒரு வருடத்தில் காஷ்வல் லீவ் 12 நாள், சிக் லீவ் 12 நாள் இவை இரண்டும் காரணங்களுடன் கேட்கும் லீவ்கள். இதைத் தவிர ஒரு வருடம் பூராவும் தொடர்ந்து வேலையிலிருந்த ஒரு சிப்பந்திக்கு அதற்கடுத்த வருடத்தில் யாதொரு காரணமும் காட்டாமல் 12 நாட்கள் லீவ் உண்டு. இதற்குப் பிரிவிலேஜ் லீவ் என்று பெயர். இந்த லீவை ஒவ்வொரு நாளாகவும் எடுத்துக் கொள்ளலாம். 24 நாள் வரையில் சேரும்படி விட்டு விட்டும் எடுத்துக் கொள்ளலாம். சட்டப்படிக்குள்ள லீவுக்குச் சம்பளப் பிடித்தம் கிடையாது.

கேள்வி: (L 1817 S. ரெங்கா, பொள்ளாச்சி) ஒருவர் முதல் மனைவி இறந்தபின், மறு விவாகம் செய்து கொண்டு தமக்கும் மனைவிக்கும் 15, 20 வருடம் தொடர்பில்லாமல், பின் தம் சொத்துக்கு வார்சுக்காக, சுவீகாரம் (அதாவது தத்து) எடுத்துக் கொண்டால், அவருக்குப்பின் அந்தச் சொத்து, வார்சு பாத்தியப்படி யாருக்குச் சேரும்? மனைவி அந்தச் சொத்தை அடையச் சட்டத்தில் இடமுண்டா?

பதில்: அவர் 14—4—1937-லோ அதற்குப்பின்னோ இறந்திருந்தால், அவருடைய சொத்தில் அவருடைய மனைவிக்குப் பாதியும், சுவீகார மகனுக்குப் பாதியும் பாத்தியமுண்டு. மனைவிக்குக் கிடைக்கும் சொத்தை அவள் ஆயுசு வரையில் அனுபவிக்கலாம்.

கேள்வி: (L 1830 நாஜிமுதீன், தாராபுரம்) முஸ்லீம் சட்டப்பிரகாரம் தகப்பனார் உயிரோடு இருக்கும் போது அவர் சம்பாதித்த சொத்தில் பாகம் பிரித்துக் கொடுக்கும்படி கேட்க அவருடைய மக்களுள் ஒருவருக்கு உரிமை உண்டா? தகப்பனருக்கு நான்கு மகன்கள் இருந்து, அதில் ஒருவனுக்கு அதிகச் செலவு செய்யப்பட்டிருக்கும் காரணத்தால் தமதுசொத்தில்அவனுக்குரிய பங்கை மறுக்கக் கூடியது சட்டப்படி செல்லுபடியாகுமா?

பதில்: முஸ்லீம் சட்டப்படி தகப்பனர் உயிருடன் இருக்கும் போது அவருடைய சொத்தில் அவருடைய மக்களுக்கு யாதொரு பாத்தியமுமில்லை. பங்கை மறுக்க இக்காரணம் ஒன்றே போதும். (தகப்பனரிடம் இருக்கும் சொத்து அவராலே சம்பாதிக்கப்பட்டதாக இருந்தாலும் வார்சு முறையில் அடைந்ததாக இருந்தாலும் இதே சட்டம் தான்.)

கேள்வி: (L 1875 ஈரோடு) பூமியைக் கிரயம் செய்து கொடுக்கும்போது, திருப்பி ரூபாய் கொடுத்தால், மறு கிரயம் செய்து கொடுப்பதாய் வாய் ஒப்பந்தம், சாட்சி உண்டு, வருடம் 15 ஆகிவிட்டது, ஏற்றுக்கொள்ளப்படுமா?

பதில்: சட்டுப்படி வாய்மொழி ஒப்பந்தம் செல்லும். அந்த ஒப்பந்தத்தில், மறு கிரயம் செய்துகொடுக்க ஏதாவது தேதி அல்லது கெடு ஏற்படுத்தப்பட்டிருந்தால் அதிலிருந்து 3 வருடங்களுக்குள் ஒப்பந்தத்தைக் கோர்ட் மூலம் வற்புறுத்தலாம். யாதொரு தேதி அல்லது கெடுவும் இல்லாவிட்டால் கிரயம் செய்து கொடுக்கவேண்டியவர் அக்கடமையை மறுத்து, அப்படி மறுத்தது கிரயம் பெறவேண்டியவருக்கு தெரிந்த தினத்திலிருந்து 3 வருடங்களுக்குள் கோர்ட் மூலம் வற்புறுத்தலாம்.

கேள்வி: (L 1955 ஜினகுமார், தஞ்சை) "வக்கீல்" அக்டோபர் இத

ழில் L 1473 கேள்விக்குப் பதில் சொல்லு கையில் இரண்டாவது விவாகத்தால் பாதிக் கப்பட்டவர் பிராது கொடுத்தால் தான் செல்லுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதே இதழில் L 1554 கேள்வியில் முதல் மனைவி சம்மதித்ததாகக் கேள்வி கேட்டிருக் கும்பொழுது தங்கள் பதிலில் விவாகத் தைக் கோர்ட் மூலம் ரத்து செய்து கொண்டு பிறகு தான் வேறு கலியாணம் செய்து கொள்ள வேண்டுமென்று இருப்பது ஒன் றுக்கொன்று முரண்பாடாக இருக்கிறதே?

பதில்: ஏற்கனவே கொடுக்கப்பட்டிருக் கும் பதில்கள் சரி. கவனித்துப்படிக்கவும். மனைவி உயிருடன் இருக்கும்போது ஒரு வர் இரண்டாவது கலியாணம் செய்து கொண்டால் அது சட்டத்தில் "கலி யாணம்" செய்து கொள்ளப்பட்டதாக மாட்டாது. அவளுக்கும் அவளுக்குப் பிறக் கும் குழந்தைகளுக்கும் வார்சு பாத்தியமே ஏற்படாமல் போய் விடும். முதல் மனைவி சம்மதித்தாலும் இரண்டாவது கலியாணம் செல்லாது, இது சட்டத்தினால் ஏற்படும் விளைவு. அதை மாற்ற முதல் மனைவியின் சம்மதம் பிரயோஜனமில்லை. இதைத்தவிர ஒரு மனைவி உயிருடன் இருக்கும் போது இரண்டாவது கலியாணம் செய்து கொள் வது ஒரு கிரிமினல் குற்றமாகும். மற்றக் குற்றங்களுக்கும் இதற்கும் என்ன வித்தி யாசமென்றால், ஒருவர் இக்குற்றத்தைச் செய்தாரென்று போலீசார் அல்லது பொது ஜனங்கள் நடவடிக்கை எடுக்க முடியாது. இரண்டாவது கலியாணத்தால் பாதிக்கப் பட்ட முதல் மனைவி பிராது கொடுத்தால் தான் கோர்ட்டில் அதை விசாரிப்பார்கள். ஆனால் சட்டத்தில் சொல்லப்படும் கார ணங்கள் இருந்து முதல் விவாகத்தைக் கோர்ட் மூலம் ரத்து செய்து கொண்டு பிறகு இரண்டாவது கலியாணமும் செய்து கொண்டால் அக்கலியாணமும் செல்லும். குற்றமும் இல்லை.

கேள்வி: (L 1960 S. ராஜன், திருச்சி) ரிஜிஸ்டர் கலியாணத்துக்குக் குறைந்த பக்ஷ வயது எல்லை உண்டா? அப்படி உண்டென்றால் ஆணுக்கும் பெண் ணுக்கும் குறைந்தது எவ்வளவு வயது ஆகி யிருக்க வேண்டும்? வயதை நிரூபிக்க வேண்டுமா? சாட்சிகள் தேவையா? எவ்வளவு?

பதில்: ஆணுக்கு 18 வயது பூர்த்தி ஆகியும் பெண்ணுக்கு 15 வயது பூர்த்தி யாகியும் இருக்க வேண்டும். ஆனால் எவ ருக்கும் 21 வயது பூர்த்தியாகா விட்டால் அவருடைய தகப்பன் அல்லது கார்டியனு டைய அனுமதி வேண்டும். 3 சாட்சிகளும் 21 வயது பூர்த்தியாகாதவருக்கு தகப்ப னார் அல்லது கார்டியனும் ரிஜிஸ்ட்ரார் முன்பு சாட்சி போடவேண்டும். விவாக ரிஜிஸ்ட்ராரிடம் எவராவது வயதாகவில்லை என்று ஆட்சேபித்தால் வயதைக் கோர்ட் டில் ருசிப்பிக்கும்படி நேரலாம்.

கேள்வி: (L 1961 N. R. கோயமுத்தூர்) ஊர் ஊராகப் பிரயாணம் செய்து ஆர்டர் வாங்குவதற்கு அமர்த்தப் பட்டிருக்கும் மாதச்சம்பளம் பெறும் குமாஸ்தாக்களுக்கு ஷாப் சட்டம் உண்டா? அதாவது மற்றக் குமாஸ்தாக்களைப் போல் அவர்களுக்கு வேலை நேரம் உண்டா?

பதில்: இல்லை.

கேள்வி: (L 1977 உத்தண்டியா பிள்ளை, திருவாரூர்) ஓர் காசுக்கடையில் புவுன் அல்லது வெள்ளி நகை திருட்டுச் சாமான் என்று தெரியாமல் வாங்கிவிட் டால், சில தினங்களுக்குப் பிறகு போலீ சார் அறிந்து கைதியுடன் வந்து சாமானைக் கேட்டால் உருப்படி இருந்தால் கொடுக்கத் தான் வேண்டுமா?

பதில்: கொடுக்கத்தான் வேண்டும்.

கேள்வி: (L 1982 மருதநாயகம், பொள்ளாச்சி) ஒரு ஜமீன் பிரதேசத்தில் ஜமீன்தார் சொந்தப்பண்ணை என்ற பெய ரால் வைத்துக்கொண்டிருக்கும் (ஹோம் பாரம் லாண்ட்ஸ்) நிலங்களின் குத்தகை தார்களுக்கு ஜமீன் ஒழிப்புச் சட்டத்தினால் ஏதேனும் நன்மை உண்டா? இந்த நிலங் கள் ஜமீன் ஒழிப்பில் உட்பட்டதா?

பதில்: குத்தகைதார்களுக்கு இவ்வித நிலத்தில் திறப்பு பட்டா கிடைக்காது. ஜமீன்தாருக்குத்தான் கிடைக்கும்.

—o—

பத்திரங்கள் - ஸ்டாம்பு, ரிஜிஸ்டர் கட்டணம் உள்பட

["வக்கீல்" அக்டோபர் இதழில் கிரயப் பத்திரங்கள் எப்படி இருக்கவேண்டுமென் பதும், அவைகளுக்குரிய ஸ்டாம்பு ரிஜிஸ்டர் கட்டணமும் விவரமாய்ச் சொல்லப்பட்டன.]

அடமானம்

கடனுக்கு ஈடாக ஸ்தாவர சொத்தின் பாத்தியங்களில் ஒரு பகுதியைக்கடன் கொடுத்தவருக்கு மாற்றுவதே (ஆங்கிலத்தில் மார்ட்கேஜ் என்று வழங்கும்.) அடமானம் எனப்படும். சட்டப்படி அடமானமும் ஒரு சொத்து மாற்றலே. ஒருவருக்கு ஒரு ஸ்தாவர சொத்தில் உள்ள எல்லா உரிமைகளையும் மாற்றுவது தான் சுத்தக்கிரய சாசனம் எனப்படும். அடமானத்தில் எல்லா உரிமைகளும் மாற்றப்படுவதில்லை. உதாரணமாக: ஒத்தி அல்லது போக்கியத்தில் சொத்தை (கடனுக்கும் வட்டிக்கும் ஈடாக) அனுபவிக்கும் பாத்தியம் மட்டில் மாற்றப்படுகின்றது. சாதாரண அடமானம் அல்லது பெந்தகத்தில் கடன் தொகையைத் திருப்பிக் கொடுக்காவிட்டால் சொத்தை விற்று, கடன் தொகையை ஈடு செய்து கொள்ளும் பாத்தியம் மாற்றப்படுகின்றது. சில அடமானங்களில் கடன் கொடுத்தவர் அடமான சொத்தைக் கோர்ட் மூலம் தான் விற்கலாம்; சில அடமானங்களில் கடன் கொடுத்தவரே விற்கலாம். கடன் வாங்கியவர், தம் சொத்தை அடமானம் வைத்த பிறகு, அவருக்கு அடமான சொத்தில் மிகுந்துள்ள பாத்தியத்திற்கு சுவான் பாத்தியம் எனப்பெயர்.

ஸ்தாவர சொத்தில் அடமானம் ஏற்படுத்தப்பத்திரம் வேண்டுமா: இரண்டு வகை அடமானங்களைத்தவிர மற்ற எவ்வித அடமானங்களையும் சட்டப்படி ஏற்படுத்த (1) சரியான ஸ்டாம்பில் எழுதப்பட வேண்டும். (2) குறைந்தது இரண்டு சாட்சிகளாவது பத்திரங்களில் கையெழுத்துப்போட வேண்டும். (3) அடமானப் பத்திரம் ரிஜிஸ்டராக வேண்டும்.

சாக்ஷிகளும் ரிஜிஸ்ட்ரேஷனும் அவசியம் வேண்டும்: இரண்டு சாட்சிகள் இல்லாத பத்திரங்கள் ரிஜிஸ்டராகி இருந்தும் செல்லுபடியாகா. அடமானம் சட்டப்படி ஏற்படாது. அப்படியே இரண்டு சாட்சிகள் இருந்தும் ரிஜிஸ்டராகாத அடமானப்பத்திரங்களும் உபயோகமில்லை. கீழே சொல்லப்படும் இரண்டு சந்தர்ப்பங்கள் நீங்கலாக மற்ற எவ்வித அடமானத்தையும் வாய்மொழியாக ஏற்படுத்த முடியாது. அதாவது: கடன் அசல் தொகை ரூ. 100-க்கு குறைவாக இருந்தால், அதற்கு ஈடாக ஸ்தாவர சொத்தைச் சுவாதீனம் கொடுப்பதின் மூலம் சட்டப்படி அடமானம் ஏற்படுத்தலாம். ஆனால் இதற்குப் பத்திரம் ஏற்பட்டால் மேற்கண்டபடி சாட்சிகளுடனும் ரிஜிஸ்டர் செய்யப்பட்டும் இருக்க வேண்டும்.

இதைத்தவிர கடன் தொகை எவ்வளவாக இருந்தாலும் சென்னை, பம்பாய், கல்கத்தா இந்த டவுன்களில் மட்டில் யாதொரு அடமானப்பத்திரங்கள் எழுதாமலே ஸ்தாவர சொத்தின் பேரில் அடமானம் ஏற்படுத்தலாம். அதெப்படி என்றால் கடன் வாங்குபவர் தம் ஸ்தாவர சொத்துக்களை அக்கடனுக்கு ஈடாக ஏற்படுத்தும் நோக்கத்துடன் அச்சொத்துக்களுக்குரிய சாசனங்கள் முதலிய ஆதாரவுகளையும் தஸ்தவேஜுகளையும் கடன் கொடுப்பவரிடம் கொடுத்து விட்டால் போதும். சட்டப்படி அச்சொத்துக்களின் பேரில் அடமானம் ஏற்பட்டு விடும். பத்திரம் வேண்டியதில்லை. அடமான சொத்துக்கள் எங்கிருந்தாலும் பாதகமில்லை. ஆனால் மேற்கண்ட மூன்று டவுன்களின் எல்லைக்குள் மூலாதாரவு தஸ்தவேஜுகள் கொடுக்கப்பட்டு இந்த வாய்மொழி அடமானம்

ஏற்படலாம். இவ்விதம் ஒரு அடமானம் ஏற்பட்ட பிறகு அதே சொத்தில் பிறகு ஒரு அடமானம் எழுதப்பட்டு அது கிரமப்படி ரிஜிஸ்டரானாலும், ரிஜிஸ்டரான அடமானம் இரண்டாவது அடமானமே ஆகும். அச்சொத்துக்களைக் குறித்து சப்ரிஜிஸ்டர் ஆபீசில் வில்லங்க சர்டிபிகேட் வாங்கினாலும் அதில் முதலில் ஏற்பட்ட வாய்மொழி அடமானம் தெரியாது. ஆகையால் அடமானத்தின் பேரில் கடன் கொடுப்பவர்கள் அடமான சொத்துக்களுக்குரிய அசல் மூலாதாரவுகளைப்பற்றி விசாரித்துத்தெரிந்து கொள்வது முன் ஜாக்கிரதையாகும்.

ஸ்டாம்பு. ஒத்தி: அடமான சொத்தைச் சுவாதீனம் கொடுத்தோ அல்லது சுவாதீனம் கொடுப்பதாக ஒப்புக் கொண்டோ ஏற்படும் ஒத்திப் பத்திரங்கள், அல்லது சுவாதீன அடமானம் அல்லது போக்கியப் பத்திரங்கள் இவைகளுக்கு ஸ்டாம்பு சுத்தக் கிரய சாசனத்திற்கு எப்படியோ அப்படியே தான். அதாவது கடன் அசல் தொகைக்கு ஸ்டாம்பு வேண்டும். கிரய சாசனத்தைப் போலவே சர்சார்ஜும் உண்டு. (கிரய சாசனத்திற்குறிய ஸ்டாம்பும் சர்சார்ஜும் "வக்கீல்" அக்டோபர் இதழில் விவரமாய்க் கொடுக்கப்பட்டிருப்பதைப் பார்க்கவும்.)

மற்ற அடமானப்பத்திரங்களுக்கு ஸ்டாம்பு விவரம்: (இவைகளுக்குச் சர்சார்ஜ் கிடையாது. ஸ்டாம்பு மட்டில்தான்.)

கடன் அசல்த்தொகை	ஸ்டாம்பு
	ரூ. அ. பை
ரூ. 10-க்கு மேற்படாமலிருந்தால்	0—6—0
ரூ. 10க்கு மேல் ரூ. 50க்கு மேல்படாமலிருந்தால்	0—12-0
ரூ. 50 ,, ரூ. 100 ,,	1—8—0
ரூ. 100 ,, ரூ. 200 ,,	3—0—0
ரூ. 200 ,, ரூ. 300 ,,	4—8—0
ரூ. 300 ,, ரூ. 400 ,,	6—0—0
ரூ. 400 ,, ரூ. 500 ,,	7—8—0
ரூ. 500 ,, ரூ. 600 ,,	9—0—0
ரூ. 600 ,, ரூ. 700 ,,	10—8—0
ரூ. 700 ,, ரூ. 800 ,,	12—0—0
ரூ. 800 ,, ரூ. 900 ,,	13—8—0
ரூ. 900 ,, ரூ. 1000 ,,	15—0—0
ரூ. 1000-க்கும் மேற்பட்ட ஒவ்வொரு ரூ. 500-க்கும் அதன் பாகத்திற்கும் அதிகப்படியாக	ரூ. 15—0—0

மகசூல் அல்லது பயிர் அடமானம்: நிலத்தில் இருக்கும் பயிரையோ அல்லது இனி விளையக் கூடிய பயிரையோ கடனுக்கு அடமானமாக வைத்துப் பத்திரம் எழுதினால் அதற்கு ஸ்டாம்பு பின்வருமாறு:

1. பத்திரத் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் கடனைத் திருப்பிக் கொடுப்பதாக எழுதப்பட்டு ரூ. 200-க்குள் கடன் தொகை இருந்தால் அதற்கு ஸ்டாம்பு அணா 4 ரூ. 200-க்கு மேல் இருக்கும் ஒவ்வொரு ரூ. 200-க்கும் அதன் பாகத்திற்கும் அதிகப்படி ஸ்டாம்பு அணா 4.

2. பத்திரத் தேதியிலிருந்து 3 மாதத்திற்கு மேல் 18 மாதங்களுக்குள் உள்ள தவணையில் கடனைத் திருப்பிக் கொடுப்பதாக எழுதப்பட்டு கடன் தொகை ரூ. 100-க்குள் இருந்தால் ஸ்டாம்பு அணா 6. ரூ. 100-க்கு மேல் இருக்கும் ஒவ்வொரு ரூ. 100-க்கும் அதன் பாகத்திற்கும் அதிகப்படி ஸ்டாம்பு அணா 6.

(மகசூல் அடமானம் ஸ்தாவர சொத்தைப் பொறுத்தது அல்ல. ஆகையால் ரிஜிஸ்டர் செய்ய அவசியமில்லை.)

பத்திரத்தில் தொகை வரவு வைப்பது
கடன் தொகை திருப்பிக் கொடுக்கப்பட்டால் அது விபரத்தை அடமானப் பத்திரத்திலேயே வரவு எழுதுவதுண்டு. ஜாடா அசல் வட்டித் தொகையும் திருப்பிக் கொடுத்து விட்டால், சட்டப்படி அடமானமும் மறைந்து போகும். ஜாடா அசல் வட்டித் தொகையும் வரவு வந்து விட்டதாக அடமானப் பத்திரத்திலேயே வரவு வைக்கச் செய்து அடமானப் பத்திரத்தை அடமானம் வைத்தவர் திருப்பி வாங்கிக் கொண்டால் போதுமானது. அந்த வரவை ரிஜிஸ்டர் செய்ய வேண்டுமென்ற அவசியம்

இல்லை. ஆனால் அடமானம் வைத்தவர் சில சமயம் விடுதலை வேண்டுமென்று விரும்பலாம். அப்படியானால் இந்த அடமான விடுதலை தனிப்பத்திரமாகவும் எழுதலாம்; அல்லது அசல் அடமானப்பத்திரத்திலேயே எழுதலாம். அப்படி விடுதலை எழுதுவதற்கு ஸ்டாம்பு வேண்டும். ரூ. 1000-க்குள் அடமானத் தொகை இருந்தால் சாதாரண அடமானத்திற்குப் போலவே ஸ்டாம்பு வேண்டும். அதற்கு மேல் தொகை எவ்வளவாக இருந்தாலும் ரூ. 15/-ஸ்டாம்பு போதும். (சர்சார்ஜ் கிடையாது.)

அடமான பாத்தியத்தை மாற்ற (டிரான்சுபர் செய்ய) ஸ்டாம்பு: அசல் அடமானப் பத்திரத்திற்கு ஸ்டாம்பு ரூ. 15-க்குள் இருந்தால் அதே போல் டிரான்சுபர் பத்திரத்திற்கும் ஸ்டாம்பு வேண்டும். அதற்கு மேல் அடமானப் பத்திரத்திற்கு எவ்வளவு ஸ்டாம்பு இருந்தபோதிலும், அதை டிரான்சுபர் செய்ய ரூ. 15 போதும். அடமானங்களை மாற்றும் டிரான்சுபர் பத்திரங்களும் ரிஜிஸ்டராகாவிட்டால் செல்லாது.

யார் ஸ்டாம்புச் செலவை ஒத்துக்கொள்ள வேண்டும்: இது விஷயமாய் யார் ஸ்டாம்புச் செலவை ஒத்துக்கொள்ளவேண்டுமென்று ஏற்பாடு செய்துகொள்ளலாம். அப்படி யாதொரு ஏற்பாடும் செய்துகொள்ளாவிட்டால், கிரயப்பத்திரங்களுக்குச் சொத்தைக் கிரயம் வாங்குபவரும், அடமானப் பத்திரங்களுக்கு அடமானம் வைப்பவரும்தான் ஸ்டாம்பு வாங்கவேண்டும். (ஸ்டாம்பு ஆக்ட் செக்ஷன் 20)

ரிஜிஸ்டர் கட்டணம்: அடமானத் தொகையைப் பொருத்து ரிஜிஸ்டர் கட்டணம் செலுத்த வேண்டும்.

அடமானத்தொகை				ரிஜிஸ்டர் கட்டணம் ரூ. அ. பை
ரூ. 1	முதல்	ரூ. 10	உள்பட	0—6—0
ரூ. 11	,,	ரூ. 25	,,	0—9—0
ரூ. 26	,,	ரூ. 50	,,	0-12—0
ரூ. 51	,,	ரூ. 75	,,	1—2—0
ரூ. 76	,,	ரூ. 100	,,	1—8—0
ரூ. 101	,,	ரூ. 200	,,	2—4—0
ரூ. 201	,,	ரூ. 300	,,	3—0—0
ரூ. 301	,,	ரூ. 400	,,	3-12—0
ரூ. 401	,,	ரூ. 500	,,	4—8—0
ரூ. 501	,,	ரூ. 600	,,	5—4—0
ரூ. 601	,,	ரூ. 750	,,	6—0—0
ரூ. 751	,,	ரூ. 1000	,,	7—8—0
ரூ. 1001	,,	ரூ. 1500	,,	9—0—0
ரூ. 1501	,,	ரூ. 2000	,,	10—8—0
ரூ. 2001	,,	ரூ. 2500	,,	12—0—0
ரூ. 2501	,,	ரூ. 3000	,,	14—0—0
ரூ. 3001	,,	ரூ. 3500	,,	16—0—0
ரூ. 3501	,,	ரூ. 4000	,,	18—0—0
ரூ. 4001	,,	ரூ. 5000	,,	20—0—0

ரூ. 5000-க்கு மேல் இருந்தால் ரூ. 5000-க்குள்ள ரூ. 20—0—0-ம், மேற்கொண்டிருக்கும் ஒவ்வொரு ரூ. 1000-க்கும் ரூ. 4—0—0 வீதமும் ரிஜிஸ்டர் கட்டணம் கட்டவேண்டும்.

இதைத் தவிர ரிஜிஸ்டர் செய்யவேண்டிய எவ்விதப் பத்திரமும் 800 வார்த்தைகளுக்கு மேல் அடங்கியதாக இருந்தால், முதல் 800 வார்த்தைகளுக்கு யாதொரு எழுத்துக் கட்டணமும் இல்லை. அதற்கு மேல் உள்ள ஒவ்வொரு 175 வார்த்தைகளுக்கும் அணா 4 வீதம் எழுத்துக் கட்டணம் கொடுக்க வேண்டும். மொத்த எழுத்துக்கள் எவ்வளவு என்று ரிஜிஸ்டர் செய்யும் உத்தியோகஸ்தர் செய்யும் மதிப்புப் போதுமானது. ஆங்கில பாஷையில் இருந்தால் மேற்கண்டபடி கட்டணம். தமிழ் முதலிய தாய்பாஷைகளாக இருந்தால் 800-க்கு மேல் உள்ள ஒவ்வொரு 100 வார்த்தைக்கும் அணா 4 வீதம் கட்டணம்.

ஜாகை வாடகை கட்டுப்பாடு சட்டம்

(T. சம்பத் B. A., B. L.)

யுத்த காலத்தில் ஜாகை வாடகை விஷயங்களில் ஏற்பட்ட நெருக்கடியை சமாளிப்பதற்காக இந்திய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சர்க்காரால் சில கட்டுப்பாடு உத்திரவுகள் ஏற்படுத்தப் பட்டன. இந்திய பாதுகாப்புச் சட்டம் 1—10—1946-ல் அமுல் இழந்துவிட்டது. அதன் காரணமாய் அச்சட்டத்தில் சர்க்காருக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரங்களை அனுசரித்து விடுவிக்கப்பட்டுள்ள எல்லா உத்திரவுகளும் ரத்தாகி விட்டன. ஜாகை வாடகை சம்பந்தமாய் சர்க்காரால் ஏற்படுத்தப்பட்ட உத்திரவுகளும் ரத்தாகி விட்டன. ஆனால் ஜாகை நெருக்கடி தீர்ந்து போகவில்லை. ஆகையால் 1—10—1946-க்குப் பின்னும் சில காலம் இதுசம்பந்தமாய் ஒரு கட்டுப்பாடு இருப்பது உசிதமென்று சட்டசபையால் 1946-ம் வருடத்திய 15-வது சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டம் இரண்டு வருடங்களுக்குத்தான் (அதாவது 1—10—1948 வரை) அமுலில் இருக்கவேண்டுமென்று இச்சட்டத்திலேயே ஒரு ஷரத்து இருக்கின்றது. ஆனால் அவசியமானால் இன்னும் அதிகப்படியாக இரண்டு வருடம் வரை இச்சட்டத்தின் உயிரை மாகாண சர்க்காரே நீடிக்கலாமென்று அதே ஷரத்தில் இருக்கின்றது. 1—10—1948-க்குப்பின் ஒரு வருடம் முதலில் நீடிக்கப்பட்டது. மறுபடியும் 1—10—1950 வரை நீடிக்கப்பட்டது. ஆனால் அப்படி சர்க்கார் நீடிக்கச் செய்வது செல்லுமா என்ற சந்தேகம் கிளப்பப் பட்டது. அதன் காரணமாக அதே ஷரத்துக்கள் அடங்கிய ஒரு சென்னை அவசரச் சட்டம் செய்யப்பட்டு இப்போது அமுலில் இருக்கின்றது.

இச்சட்டம் அமுலில் இருக்கும் இடங்கள்: சென்னைபட்டினத்திலும், எல்லா முனிசிபாலிடிகளிலும் முதலில் அமுலுக்கு வந்தது. இம்மாகாணத்தில் தேவையான எந்த இடத்திலும் இச்சட்டத்தின் அமுலை விஸ்தரிக்க மாகாண சர்க்காருக்கு அதிகாரமுண்டு. அதை அனுசரித்து ஒவ்வொரு ஜில்லாவிலும் பல ஊர்களில் இச்சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. இச்சட்டம் அப்படி விஸ்தரிக்கப்பட்ட இடங்களின் ஜாபிதா 13—3—1947-தேதியுள்ள போர்ட்செயிண்ட் ஜார்ஜ கெஜட் பாகம் I பக்கம் 165-ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது.

இரண்டு வகை கட்டடங்கள்: இச்சட்டத்தில் கட்டடங்கள் இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அதாவது, (1) வசிப்பதற்கான கட்டடங்கள் (குடியிருப்பு வீடு, குடிசை, பங்களா, பங்களாவைச் சேர்ந்த தோட்டம், (2) வசிப்பதற்கல்லாத கட்டடங்கள், (கடை, கிடங்கு, தொழிற்சாலைகள் போன்றவை.) இவை இரண்டுக்கும் இச்சட்டத்தில் சில விஷயங்களில் வித்தியாசமுண்டு. அவை ஆங்காங்கு சொல்லப்படும். ஆனால், ஒன்று மட்டில் இங்கே கவனிக்கவேண்டும். அதாவது, வசிப்பதற்கான கட்டிடத்தை வசிப்பதற்கல்லாத கட்டிடமாக மாற்ற வேண்டுமானால் ஜாகை வாடகை கண்ட்ரோலர் என்ற அதிகாரியிடம் எழுத்துமூலம் அனுமதி பெற்றுத்தான் மாற்றவேண்டும். அப்படி அனுமதி இல்லாமல் மாற்றுவது குற்றமாகும். அக்குற்றத்திற்கு மூன்றுமாதம் வரை சிறை தண்டனையும் அல்லது ரூ. 2000 வரை அபராதமும் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம்.

கட்டடங்கள் காலியானல் தெரிவிக்க வேண்டும்: மாதம் ஒன்றுக்கு ரூபாய் 30-க்கு மேல் வாடகை உள்ள கட்டிடங்கள் சொந்தக்காரரால் அல்லது குடியிருப்பவரால் காலி செய்யப்பட்டால், காலிசெய்யப்பட்ட தினத்திலிருந்து ஏழு நாட்களுக்குள் அவ்விஷயத்தை சொந்தக்காரர் கண்ட்ரோலருக்கு எழுத்துமூலம் தெரியப்படுத்த வேண்டும். அப்படி தெரியப்படுத்தாமலிருப்பது குற்றமாகும். இக்குற்றத்திற்

கும் 3 மாதம் வரை சிறை தண்டனை அல்லது ரூ. 2000வரை அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம்.

அப்படித் தெரிவித்த ஒரு வாரத்திற்குள் அக்கட்டடம் சர்க்காருக்குத் தேவை என்று சர்க்கார் அதிகாரிகள் எவரும் தெரியப் படுத்தாவிட்டால், சொந்தக்காரர் அக் கட்டடத்தை வேறு எவருக்கும் வாடகைக்கு விடலாம். சர்க்காருக்குத் தேவையாக இருந்தால், கட்டிடம் காலியான விஷயத்தை கண்ட்ரோலருக்குத் தெரிவித்த தேதி முதல் சர்க்கார் 'நியாய வாடகை' கொடுப்பார்கள்.

"**நியாய வாடகை**": ஒரு கட்டிடத்திற்கு "நியாய வாடகை" தீர்மானம் செய்யவேண்டுமென்று அக்கட்டிடத்தை வாடகைக்கு வைத்திருப்பவர் அல்லது கட்டிடத்தின் சொந்தக்காரர் எவரும் கண்ட்ரோலர் என்ற அதிகாரிக்கு மனுக் கொடுக்கலாம். ஒரு கட்டிடத்தின் நியாய வாடகையைத் தீர்மானம் செய்ய கண்ட்ரோலர் சில விஷயங்களை கவனிக்க வேண்டும். அவை யாவன: (1) 1—4—1939 முதல் 31—3—1940 வரை உள்ள 12 மாதங்களில் அதே கட்டிடத்திற்கோ அல்லது அதைப்போலுள்ள கட்டிடத்திற்கோ என்ன வாடகை வந்தது என்றும் (2) அக்காலத்தில் அக்கட்டடத்திற்கு முனிசிபாலிடி அல்லது சென்னை கார்ப்பரேஷன் அல்லது பஞ்சாயத்து போர்டு இவைகளால் வரி விதிப்பதற்காக என்ன வாடகை மதிப்பு போடப்பட்டிருக்கின்றது என்றும் (3) 1-4-1940-க்குப்பிறகு வாடகையைத் தவிர வேறு அட்வான்சு போன்ற முன் தொகைகள் ஏதாவது கொடுக்கப்பட்டதா என்பன போன்ற விஷயங்களையும் முதலில் கவனித்து அக்காலத்தில் உள்ள வாடகையை ஏற்படுத்திக் கொள்வார். அத்துடன் கீழேகண்ட விகிதப்படி அதிகம் சேர்த்துக்கொள்ளலாம். அப்படிச் சேர்த்ததை "நியாய வாடகை" என்று கண்ட்ரோலர் தீர்மானம் செய்வார்.

வசிப்பதற்கான கட்டடங்களுக்கு

***1939-40*-ல்**	***1—4—1940*-க்கு முன் கட்டப்பட்ட கட்டடங்களுக்கு**	***1—4—1940*-க்குப் பின் கட்டப்பட்ட கட்டடங்களுக்கு**
மாத வாடகை ரூ. 25-க்கு மேல் இல்லாவிட்டால்	1939—40 வாடகையுடன் $8\frac{1}{3}$ சதவிகிதம் சேர்த்துக் கொள்ளலாம்.	1939—40-ல் கிடைக்கக் கூடிய வாடகையுடன் 25 சதவிகிதம் சேர்த்துக் கொள்ளலாம்.
மாத வாடகை ரூ. 25-க்கு மேல் ரூ. 50-க்கு மேற்படாவிருந்தால்	ஷ வாடகையுடன் $12\frac{1}{2}$ சதவிகிதம் சேர்த்துக் கொள்ளலாம்.	ஷ வாடகையுடன் $37\frac{1}{2}$ சதவிகிதம் சேர்த்துக் கொள்ளலாம்.
மாத வாடகை ரூ. 50-க்கு மேல் இருந்தால்	ஷ வாடகையுடன் 25 சதவிகிதம் சேர்த்துக் கொள்ளலாம்.	ஷ வாடகையுடன் 50 சதவிகிதம் சேர்த்துக் கொள்ளலாம்.

வசிப்பதற்கல்லாத கட்டடங்களுக்கு

***1939—40*-ல்**	***1—4—1940*-க்கு முன் கட்டப்பட்ட கட்டடங்களுக்கு**	***1—4—1940*-க்குப் பின் கட்டப்பட்ட கட்டடங்களுக்கு**
மாத வாடகை ரூ. 50-க்கு மேற்படாமல் இருந்தால்.	1939—40 வாடகையுடன் $37\frac{1}{2}$ சதவிகிதம் சேர்த்துக் கொள்ளலாம்.	1939—40-ல் கிடைக்கக் கூடிய வாடகையுடன் 50 சதவிகிதம் சேர்த்துக் கொள்ளலாம்.
மாத வாடகை ரூ. 50-க்கு மேல் இருந்தால்.	ஷ வாடகையுடன் 50 சதவிகிதம் சேர்த்துக் கொள்ளலாம்.	ஷவாடகையுடன் 100 சதவிகிதம் சேர்த்துக் கொள்ளலாம். (அதாவது இரட்டிப்பாக்கலாம்)

இச்சட்டம் அமுலுக்கு வருமுன் நியாய வாடகை தீர்மானிக்கப்பட்டிருந்தால் கூட மறுபடியும் சொந்தக்காரர் மேற்கண்டபடி வாடகையை உயர்த்த மனுப்போடலாம்.

'நியாய வாடகையை' உயர்த்த: இவ் விதம் ஒரு கட்டிடத்திற்கு நியாய வாடகை தீர்மானிக்கப்பட்ட பிறகு, அதை உயர்த்த முடியாது. ஆனால் கட்டிடத்தின் சொந்தக் காரர் செலவு செய்து புதிதாக கட்டிடங்கள் சேர்த்தாலும், செம்மைப்படுத்தினாலும், மாற்றினாலும் அதே விதம் மாறுதலடைந்த அக்கம்பக்கத்திலுள்ள கட்டிடங்களுக்கு கிடைக்கக்கூடிய அளவு வாடகையை உயர்த்தலாம். அதுவும் இவ்விதம் புதிய மாறுதல்களுக்கான ஜாடா வேலைகளும் முடிந்த பிறகு. மேலும், அக்காலத்தில் அக் கட்டடத்தில் யாராவது குடியிருந்தால் அல்லது அதை வாடகைக்கு வைத்திருந் தால் அவருடைய வேண்டுகோளின் பேரில் செய்யப்பட்ட மாறுதலாக இருக்கவேண் டும். மாறுதல் விஷயமாய் ஏற்பட்ட வாடகை உயர்வைப்பற்றி கட்டிடத்தின் சொந்தக்காரருக்கும் வாடகைக்கு வைத் துக் கொண்டிருப்பவருக்கும் சச்சரவு ஏற் பட்டால் அதை கண்ட்ரோலர் தான் தீர்க்க வேண்டியவர்.

நியாய வாடகையைத் தவிர அதிகப்படி யான தொகைகள் வாங்கக் கூடாது: ஒரு கட்டடத்திற்கு "நியாய வாடகை" எவ் வளவு என்று கண்ட்ரோலரால் தீர்மானிக் கப்பட்ட பிறகு அதற்கு மேல் ஜாஸ்தி வாடகையாவது ஒரு மாத வாடகைத் தொகைக்கு மேல் அட்வான்சாவது முன் பணமாவது கட்டடத்தின் சொந்தக்காரர் கேட்கவும் கூடாது; வாங்கவும் கூடாது. இதற்கு மாறாகச் செய்வது குற்றம். மூன்று மாதம் வரை சிறை தண்டனையாவது அல்லது ரூ. 2000 வரை அபராதமாவது அல்லது இரண்டுமாவது விதிக்கப்படலாம். மேலும், (புதிதாகச் சேர்க்கப்பட்டதற் காக மேலே கண்டபடி வாடகை உயர்த்து வதைத் தவிர) அதிக வாடகை கொடுப்ப தாக ஒருவர் ஒப்புக் கொண்டாலும் அது செல்லாது; கொடுக்க வேண்டியதுமில்லை. இச்சட்டம் அமுலுக்கு வந்த பிறகு நியாய வாடகைக்கு மேல் ஒருவர் கொடுத்திருந் தால் அதை அவருக்கு திருப்பிக்கொடுத்து விட வேண்டும். அல்லது அவர் இஷ்டப் பட்டால் வாடகையில் உளவடைத்துக் கொள்ள வேண்டும்.

(தொடரும்)

நீதிபதி: கைதியே, இப்பொழுது நீ என்ன சொல்லப்போகிறாய்?

கைதி: சொல்லவேண்டியது ஏராளமாயிருக் கிறது. தாங்கள் மட்டும் அவகாசம் கொடுக்கவேண்டும்.

நீதிபதி: வேண்டிய அவகாசம் கொடுக் கிறேன். ஏழு வருஷம் கொடுத்திருக் கிறேன் போ!

மாஜிஸ்டிரேட்: நீ ஒரு பெண்ணாயிருந்தும் இந்தத் திருடனைப் பிடித்து உதைத் தது மிகவும் பாராட்டத்தக்கது.

ஸ்திரீ: அவன் திருடன் என்று எனக்குத் தெரியாதுங்க. என் புருஷனுக்கும்னு நினைச்சேன்.

குற்றவாளி: (வக்கீலைப் பார்த்து) தாங்கள் எனக்கு மன்னிப்பு பெற்றீர்களா?

வக்கீல்: எவ்வளவு சிரமப்பட்டும் முடிய வில்லை. ஆனால் உனக்கு ஒரு சந்தோஷ சமாசாரம்.

குற்றவாளி: என்னங்க?

வக்கீல்: செவ்வாய்க்கிழமை நாள் நன்றாக இல்லை. ஆகையால் முதலில் போட் டிருந்த உத்திரவை மாற்றச்செய்து, புதன்கிழமை தூக்குப்போட ஏற்பாடு செய்துவிட்டேன்.

கண்ட்ரோல்-லைசென்ஸ்-ரேஷன்-விலை நிர்ணயம்

இதர சர்க்கார் அறிக்கைகள்

பருத்தி

பருத்தி கட்டுப்பாடு உத்திரவு-1949

இந்தியாவிலுள்ள எல்லா மாகாணங்களுக்கும் பொருந்தும்படி மத்திய சர்க்காரால் இப்பருத்தி கட்டுப்பாடு உத்திரவு 12—9—1949-ல் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. இக்கட்டுப்பாடு உத்திரவின்படி, இது அமுலுக்கு வந்த 30 தினங்களுக்குப் பிறகு (அதாவது 12—10—1949-க்குப் பிறகு) நூல் உற்பத்தியாளரைத் தவிர மற்ற எவரும் லைசென்சு இல்லாமல் பருத்தி வாங்கவும் விற்கவும் சேமித்து வைக்கவும் கூடாது; பருத்தியில் வியாபாரமும் செய்யக்கூடாது; பருத்தியை அடகாக வைத்திருக்கவும் கூடாது. மாகாண சர்க்காரால் லைசென்சு கொடுப்பதற்காக நியமிக்கப்படும் அதிகாரிக்கு B. நமூனைப்படி மனுப்போட்டு லைசென்சு வாங்கிக் கொள்ள வேண்டும். லைசென்சுக் கட்டணம் ரூ. 25. லைசென்சில் கண்ட கெடுவுக்குப் பிறகும் வருடா வருடம் லைசென்சை ரூ. 25 கட்டணம் செலுத்தி புதுப்பித்துக் கொள்ளவேண்டும். லைசென்சில் கண்ட நிபந்தனைகளை மீறினால் குற்றமாவதுடன், லைசென்சும் ரத்தாகப் படலாம். பருத்தி வியாபாரிகள் அவர்களுக்கு கொடுக்கப்படும் லைசென்சில் கண்டபடி தினசரி கணக்கு வைத்துக் கொள்வதுடன் மாதம் இருமுறை ரிடர்ன் அனுப்ப வேண்டும். பருத்தி வாங்க அனுமதி உள்ளவர்களுக்குத்தான் பருத்தியை விற்கலாம். விற்பனைக்கு விவரம் கண்டு ரசீது கொடுக்க வேண்டும். லைசென்சில் இன்னும் சில நிபந்தனைகளும் இருக்கின்றன. யாதொரு காரணம் காட்டாமல் கூட லைசென்சை ரத்து செய்ய அதிகாரமுண்டு. பருத்தி பருத்திக் கொட்டை இவைகளின் குறைந்தபட்ச விலையையும் அதிகபட்ச விலையையும் நிர்ணயிக்க ஜவுளி கமிஷனருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்விதம் விலை நிர்ணயிக்கப்பட்ட பிறகு அந்த அதிகபட்ச விலைக்கு மேலாவது குறைந்தபட்ச விலைக்குக் குறைவாகவாவது விற்கவும் வாங்கவும் கூடாது. பருத்தியை விற்கவும் வாங்கவும் செய்து கொள்ளப்படும் ஒப்பந்தங்கள் செல்லாது. (குறிப்பிட்ட வகை ஒப்பந்தங்களுக்கு விதிவிலக்கு அளிக்க ஜவுளி கமிஷனருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.) நூல் உற்பத்தி செய்பவர்கள் ஒரு சமயத்தில் எவ்வளவுக்கு மேல் பருத்தி வைத்திருக்கக் கூடாதென்றும் ஜவுளி கமிஷனர் நிர்ணயிக்கலாம். அதற்கு அதிகமாக பருத்தி வைத்திருப்பவரை அப்பருத்தியை அவர் குறிப்பிடும் நபர்களுக்கு விற்கும்படி வற்புறுத்தலாம். இதைத் தவிர ஜவுளி கமிஷனருக்கு ஏராள அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. விதிகள் செய்யவும், பருத்தி போக்குவரத்தைக் கட்டுப்படுத்தவும் ஜவுளி கமிஷனருக்கு அதிகாரம் உண்டு.

(*27—9—1949* சென்னை சர்க்கார் கெஜட் பாகம் II ரூல் சப்ளிமெண்ட் பக்கம் *165*)

ஜீனி

ஆலைகளிலுள்ள எல்லா ஜீனியும் சென்னை சர்க்காரால் விலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது: அத்தியாவசியமான பொருள்களைப்பற்றி சர்க்காருக்கு விசேஷ அதிகாரங்களை அளிக்கும் 1946-ஆம் வருடத்திய மத்திய சட்டத்தின் கீழ் சென்னை மாகாணத்தில் உள்ள (விசையால் ஓடும்) சர்க்கரை ஆலைகளிலும் அவ்வாலைகளுக்குச் சொந்தமாய் வேறு இடங்களிலுமுள்ள எல்லா சர்க்கரை ஸ்டாக்கும் கட்டாயமாக சென்னை சர்க்காருக்கு விற்கப்பட்டதாக ஒரு உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. வெவ்வேறு தினுசு ஜீனியின் விலையும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆலைக்காரர்கள் இந்த உத்திரவால் பாதிக்கப்படும் ஜீனி அவரவர்களிடமிருப்பது எவ்வளவென்றும் எங்கே இருக்கிறதென்றும் சிவில் சப்ளைஸ் கமிஷ

னருக்குத் தெரிவிக்கவேண்டியது. அவை இனி சர்க்காருக்குச் சொந்தமானதாக இருந்தாலும் சர்க்காரால் அப்புறப்படுத்தும் வரை அதை ஜாக்கிரதையாய் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு ஆலைகளுக்குண்டு.

(29—9—1949 சென்னை சர்க்கார் (விசேஷ) கெஜட் பாகம் II பக்கம் 1)

லைசென்சு

பெப்பர்மெண்ட் தொழிற்சாலைகள் நடத்த லைசென்சு

சென்னை சர்க்காரால் 'கன்பெக்ஷனரி பாக்டரீஸ் லைசென்சு ஆர்டர் 1949' என்ற கண்ட்ரோல் உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. 11—10—49-ல் அமுலுக்கு வந்தது. இனி பெப்பர்மெண்ட், லாஸெஞ்ஜ், டாபி, சாக்லேட் முதலிய பல வகை மிட்டாய்கள் செய்யும், 10 அல்லது அதற்கு அதிகமான வேலையாட்கள் உள்ள தொழிற்சாலைகள் லைசென்சு பெற்றுத்தான் வேலை செய்யவேண்டும். சிவில் சப்ளைஸ் கமிஷனர், அல்லது அவரிடம் அதிகாரம் பெற்றவர் அல்லது ஜில்லா கலெக்டர் இவர்களுக்கு மனுச் செய்து தொழில் செய்ய லைசென்சு வாங்கிக் கொள்ள வேண்டும். சிவில் சப்ளைஸ் கமிஷனருடைய அனுமதி அன்னியில் மிட்டாய் செய்யும் புது தொழிற்சாலைகளும் ஆரம்பிக்கக் கூடாது. லைசென்சில் கண்ட நிபந்தனைகளை மீறுவது குற்றமாவதுடன் லைசென்சும் ரத்து செய்யப்படலாம். லைசென்சு கொடுக்கும் அதிகாரி ஜீனி வாங்குவது பற்றியும் சேகரித்து வைப்பது பற்றியும் பெப்பர்மிண்ட்மிட்டாய் முதலியவைகள் செய்வது, சேமித்து வைப்பது பற்றியும் யுக்தமான உத்திரவுகள் செய்யலாம். லைசென்சில் கண்ட முக்கிய ஷரத்துக்கள்: லைசென்சில் கண்ட இடத்தைத்தவிர வேறு இடங்களில் அதற்காக பிரத்யேக லைசென்சு அன்னியில் தொழில் நடத்தக்கூடாது. ஸ்டாக் முதலிய காண்பிக்கும் கணக்குகள் வைத்திருக்கவேண்டும்; ஒவ்வொரு மாதக் கணக்கும் அடுத்த மாதம் 5 தேதிக்குள் நமூனா 1, 2, 3 படி ஜில்லா கலெக்டருக்கு ரிடர்ன் அனுப்ப வேண்டும். பெப்பர்மெண்ட் முதலிய மிட்டாய் வாங்குபவருக்கு விபரம் கண்ட ரசீது கொடுக்க வேண்டும். அதற்கு ட்யூப்ளிகேட் வைத்திருக்க வேண்டும். (நமூனா 1. சர்க்கரையைப்பற்றி. நமூனா 2. பெப்பர்மெண்ட் முதலிய மிட்டாய்களைப்பற்றி. நமூனா 3. மிட்டாய் அனுப்புவதைப்பற்றி) இச்சட்டத்தின் ஷரத்துக்களை மீறியதாக குற்றம் ஏற்பட்டால் மற்ற தண்டனையுடன் சம்பந்தப்பட்ட ஜீனி அல்லது பெப்பர்மெண்ட் முதலிய மிட்டாய்களும், அவைகளை வைத்திருக்கும் டின் பெட்டி முதலியவைகளும் எடுத்துச் செல்லும் மோட்டார் லாரி, வண்டி, மாடுகள் முதலியவையும் சர்க்காரால் பறிமுதல் செய்யப்படலாம்.

(11—10—1949 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் II விசேஷ வெளியீடு பக்கம் 1)

பூரு - கற்கண்டு செய்ய பர்மிட்: இனி பூரு செய்யவும், கற்கண்டு செய்யவும் சிவில் சப்ளைஸ் கமிஷனரிடம் அல்லது அவரிடம் அதிகாரம்பெற்ற அதிகாரி அல்லது ஜில்லா கலெக்டரிடம் பர்மிட் வாங்கிக்கொள்ள வேண்டும். இதற்கு மாறாகச் செய்தால் குற்றமாவதுடன் மேற்கண்டபடி சம்பந்தப்பட்ட ஜீனி, டின், மோட்டார், லாரி, வண்டி, மாடு முதலியவை சர்க்காருக்கு பறிமுதலாகலாம்.

(11—10—49 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் II விசேஷ வெளியீடு பக்கம் 3)

18769

Printed by DR. V. R. MURTY at the Homoeopathy Press, Banadurai, Kumbakonam.
Edited and Published by M. K. RAJAGOPALAN at No. 48, Kalyanaraman Street, Kumbakonam.

கல்யாண ஸீஸனுக்கென்றே புதுப்புது டிஸைன்

பெங்களூர், காஞ்சிவரம், கும்பகோணம்

பட்டுச் சேலைகள்

ஏராளமாக ஸ்டாக் செய்திருக்கிறோம். தேவைக்கு உடனே முந்துங்கள்.

ரெங்கமூர்த்தி கம்பெனி

கெருடலாயத் தெரு, :: கும்பகோணம்.

பிராஞ்சுகள் :—மெ. மெ. வீதி, காரைக்குடி & நாட்டரசன்கோட்டை.

சாயத்திற்கு உத்திரவாதமுள்ள
அற்புத கலர்களில் கவர்ச்சி செய்யும் பார்டர்கள்
முந்திகள் அமைந்த எமது சொந்த கை நெசவு
ஜரிகை பட்டு & நூல் சேலைகள்

வேண்டியவற்றிற்கு ஆர்டர் கொடுங்கள்.

பிரிட்டிஷ் எம்பயர் எக்ஸிபிஷனில் மெடல் சர்டிபிகேட் பெற்ற

ராணி ரெங்கய்யர் ஸன்ஸ்

பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள்

கெருடலாயத் தெரு — கும்பகோணம்

கிளை : 20, லெக்ஷ்மிபுரம் 2-வது தெரு, மதுரை.

Regd. No. M. 5399

V. S. & Sons

SWEETS

குணத்திலும்
மணத்திலும்
நிகரற்றது

வி. எஸ். & ஸன்ஸ்

பெப்பர்மெண்டுகள்

தயாரிப்பவர்கள் :

தென் இந்திய பெப்பர்மெண்டு தொழிற்சாலை

கும்பகோணம்

(Estd. 1925)

ஹோமியோபதி பிரஸ், கும்பகோணம்.